# எனது ஊர் காரை நகர்

www.karaiNEWS.com

இதழ் 25

கனடாவில் இருந்து வெளியாகும் காரைநகர் செய்தி சஞ்சிகை. இலவசம். தொலைபேசி: 1 416 821 8390







உள்ளே... புட்டு



## உள்ளே...


☆ ' சாம்பசிவம் - ஞானாமிர்தம் ' 1927ம் ஆண்டு வெளியான சிறுகதை...(பக்கம் 04

☆ களபூமி கல்வி அபிவிருத்திக் கழகம் ...(பக்கம் 07)

☆ 2020 தரம் 5 புலமைப்பரிசில் சாதனை மாணவர்கள்...(பக்கம் 09)

☆ 'அறக்கொடை செம்மல்' சுப்பிரமணியம் கதிர்காமநாதன் ... (பக்கம் 14)

☆ பாடசாலைகளிற்கான நிரந்தர நிதியம் ஒரு கோடி இருபது இலட்சம்... (பக்கம் 22)

☆ வாறிவளவு நல்லியக்கச் சபை - பொன்விழா (பக்கம் 24)

☆ 'காரைநகர் சேவையாளர்கள்' விருதும் விழாவும்...( பக்கம் 27)




5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 180 புள்ளிகளிற்கு மேல் பெற்றவர்கள்


187 புள்ளிகள


184புள்ளிகள்


181 புள்ளிகள்


181 புள்ளிகள்









'எனது ஊர் காரைநகர்'
வெளியீடு பிரதான அனுசரணை:
**Dr.V.Vijayaratnam M.D Canada**



Sell your home for top dollars
Buy Your Home For Less $$$
•FREE home market evaluation
•Free home staging
•Professional photo & virtual tour
•Just listed & sold flyer distribution
•Social media marketing
•Install sale & directions sings
•Email / e-flyers & weekly advertising
•Weekly open house
#1 RE/MAX
OUTSTANDING AGENT FOR OUTSTANDING RESULTS
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
independently owned and operated
Bus: 905-475-4750
Fax: 905-475-4770
50 Acadia Ave #120, Markham, ON L3R 0B3
Honest, Knowledgeable & Professional Service
in Your Neighborhoods Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
Dir: 416-333-6115
nanohomes@gmail.com




இதழ் 1 - 2007

## மனதிலிருந்து...

‘எனது ஊர் காரைநகர்’ கனடாவில் இருந்து வெளியாகும் காரைநகர் மக்களிற்கான செய்தி சஞ்சிகை. 2007ம் ஆண்டு முதல் வெளிவர ஆரம்பித்து இன்று உங்கள் கைகளில் தவழும் இந்த இதழ் 25வது இதழ் ஆகும். இணையத்தளம், இன்ரநெற் வசதிகள் குறைவாக இருந்த காலத்தில் கனடாவில் 1500 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு 500 பிரதிகளிற்கு மேல் கனடாவில் வதியும் காரைநகர் மக்களிற்கு அஞ்சல் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்தது. தற்போது இன்ரநெற்றும் இணையத்தளமும் கைக்குள் அடங்கியதன் பின்னர் கைபேசிகள் மூலம் அதிவிரைவாக காரைநகர் செய்திகளை எடுத்து வந்தாலும் அவற்றில் உள்ள உண்மைத்தன்மைகள் மற்றும் உத்தரவாதமற்ற வகையில் அவரவர் விருப்பு வெறுப்புகளிற்குட்பட்டு மக்களின் தேவைகளோ மண்ணின் வளர்ச்சியோ குறிக்கோளற்ற வகையில் உலாவந்து கொண்டிருக்கும் நிலையில் ‘எனது ஊர் காரைநகர்’ சஞ்சிகையின் தேவை இன்னமும் இருந்து கொண்டே இருக்கின்றது.




இதழ் 5 - 2009

எதிர்பார்ப்புகளும், எதிர்ப்புக்களும் இருந்தாலும் அவையே இந்த பணியில் என்னை ஊக்குவிக்கும் காரணிகளாகவும் விளங்கி வருகின்றன. ஆரம்பம் முதல் இன்றுவரை இப்பணியில் மனதார ஊக்குவிக்கும் நல்லுள்ளங்களிற்கு மத்தியில் இச்சஞ்சிகை வெளியிட செலவாகும் நிதியின் ஒரு பகுதியினை வழங்கிவரும் அனுசரணையாளர்கள் ஊரிற்கான பணியிலும் வருடந்தோறும் பலவழிகளிலும் உதவியளித்து வரும் ஊர் பற்றாளர்களாவர். அவர்களிற்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியினை தெரிவிக்கின்றேன். அது மட்டுமன்றி கனடாவில் எனது குடும்ப வருவாயின் ஒரு பகுதி மூலம் ஊரிற்கான பணியில் ஈடுபட்டுவரும் வகையில் இந்த பணிகளிற்காக ‘எனது ஊர் காரைநகர்’ சஞ்சிகை மற்றும் www.karainews.com ஊடாக செலவாகும் நிதிக்காக கனடிய வருவாய் பதிவு மூலம் குறிப்பிடப்படும் சிறு தொகைக்கு வரிவிலக்கும் கிடைத்து வருவதால் இப்பணியை நேர்மையுடனும் நாணயத்துடனும் தொடர்வதற்கு கனடிய அரசின் மறைமுக உதவியும் கிடைத்து வருகின்றது என்பதனை வெளியிடையாகவே தெரிவிப்பதில் பெருமை கொள்கின்றேன்.

எதிர்பார்ப்புகள் இன்றி இப்பணியில் ஆரம்பம் முதல் ஈடுபட்டு வருவதால் எதிர்ப்புகளிற்கு மத்தியிலும் பலவித முறைப்பாடுகளிற்கு மத்தியிலும் ஊர்ப்பணி தொடர்கின்றது.




இதழ் 13 - 2011

‘உலகில் நாளை நாமிருப்பது நிச்சயமல்ல. இருக்கும் பொழு
தே அறங்களைச் செய்யவேண்டும். பின்னாற் செய்வோ
மென்று நாளைப் பின் போக்கினால் நாம் கடைத்தேற மாட்டோம்...’
என்கின்ற சம்பந்தர்கண்டி அ.நாகலிங்கம் அவர்களின் 1927ம் ஆண்டு கூற்றிற்கு இணங்க நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்.

www.karainews.com
**‘ எனது ஊர் காரைநகர் ’**
**தொகுப்பாளர்:**
தீசன் திரவியநாதன்
331 Trudelle Stree, Unit 34
Toronto, Ont. M1J 3J9 Canada
Email: theesan@karainews.com
**TEL: 416 821 8390**



## கனடா காரை கலாசார மன்றத்தின் ஊரிற்கான உதவிப் பணிகள் 2020

காரைநகர் அல்லின் வீதியில் வசிக்கும் ஒரு நிரந்தர வருமான மற்ற வறுமைக்கோட்டிற்கு கீழ் வசிக்கும் ஒரு குடும்பத்தினருக்கு மூன்றரை இலட்சம் ரூபா செலவில் சிதைவடைந்த நிலையில் இருந்த வீட்டினை புனரமைப்பு செய்து கொடுக்கப்பட்டது. மேற்படி குடும்பத்தினரின் வீட்டு நிலமையினை காரைநகர் அபிவிருத்தி சபையினரும் காரைநகர் வடக்கு பிரதேச கிராம சேவகரும் உறுதி செய்ததுடன் நேரடியாக சென்று தேவையான வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. காநைரகர் அபிவிருத்தி சபை யினர் வீட்டு புனரமைப்பு பணிகளை முன்னின்று நிறைவேற்றி கடந்த ஆகஸ்ட் மாதம் வழங்கினர்.




## க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருந்த 50 மாணவர்களிற்கு தலா 2,500 நிதி உதவி




காரை இந்து, யாழ்ற்ரன் கல்லூரிகளில் இருந்து முறையே 28, 22 மாணவர்கள் கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றியிருந்தார்கள். இவர்கள் அனைவருக்கும் தலா 2,500 ரூபா வீதம் 50 மாணவர்களிற்கு வழங்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக பலவித கஷ்டங்களிற்கும் மனஉளைச்சல்களுக்கும் உள்ளாகியிருந்த நிலையில் கனடா காரை கலாசார மன்றத்தின் ஊடாக வழங்கப்பட்ட இந்நிதி பெரும் ஊக்கத்தையளித்திருந்ததாக மேற்படி பாடசாலை அதிபர்கள் தெரிவித்திருந்தார்கள். மேற்படி நிதி உதவிகள் நேரடியாக காரைநகர் இந்துக் கல்லூரியிலும், யாழ்ற்ரன் கல்லூரியிலும் மாணவர்களிற்கு காநைகர் அபிவிருத்தி சபையினர் மூலம் வழங்கப்பட்டது.






கனடா காரை கலாசார மன்றம் காரைநகர் பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் மற்றும் கற்பித்தல் தேவைகளிற்காக வருடந்தோறும் பலவிதமான பணிகளை முன்னெடுத்து வருவது யாவரும் அறிந்ததே. 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை கருத்தரங்குகள், தரம் 10 க்கான க.பொ.த.சாதாரண தர பரீட்சை கருத்தரங்குகள் என்பனவும் கனடா காரை கலாசார மன்றத்தினால் முன்னெடுக்கப்பட் டு வருகின்றன.

அத்துடன் கடந்த வருடம் காரைநகர் ஆரம்ப பாடசாலை அதிபர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பாடசாலைகளிற்கு தேவையான போட்டோ பிரதி இயந்திரங்களை ஒவ்வொரு பாடசாலைகளிற்கும் வழங்கவும் அதனை பராமரிப்பதிலும் ஏற்படும் நடைமுறை சிக்கல்கள் ஆராயப்பட்டதனால் நீண்ட காலம் பாவனைக்கு ஏற்ற வலுக்கொண்ட போட்டோ பிரதி இயந்திரம் ஒன்றினை பெற்று காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்தில் வைப்பதன் மூலம் அனைத்து பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அதனை பயன்படுத்திக்கொள்ள முடியும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வெகுவிரைவில் அதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் எனவும் கனடா காரை கலாசார மன்றத்தின் ஊடாக அறியப்படுகின்றது.

## 'ஒருத்தி ' திரைப்படம் மூலம் கிடைக்கப்பெற்ற நிதி காரைநகர் வைத்தியசாலை சிறு புனரமைப்பிற்காக வழங்கப்பட்டது

P.S.சுதாகரன் இயக்கத்தில் கனடாவில் வெளியான 'ஒருத்தி ' திடைப்படத்தின் ஒரு நாள் காட்சியினை கனடா காரை கலாசார மன்றத்தினர் டிசம்பர் 7, 2019 அன்று எடுத்து வெளியிட்டிருந்தனர். அதன் மூலம் கிடைக்கப்பெற்ற 2000 டொலர்கள் (இரண்டரை இலட்சம் ரூபாய்கள்) மூலம் காரைநகர் வைத்தியசாலைக்கு தேவையான உபகரணங்களும், மகப்பேற்று தாய்மார்களை கிளினிக்கில் பார்வையிட வசதியாக ஒரு பகுதியினைப் புனரமைத்து மின்சார வசதிகள், வர்ணபூச்சு வேலைகள், கூரை வேலைகள் என்பவற்றிற்காக காரைநகர் அபிவிருத்தி சபையின் ஊடாக நிறைவேற்றியிருந்தது. இதற்கு காரைநகர் இளையோர் அமைப்பு சிரமதானம் மூலம் செயற்படுத்தி கொடுக்க முன்வந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்த




க்கது.

காரைநகர் மாப்பாணவூரியை சேர்ந்த மற்றுமொரு குடும்பத்திற்கு கனடா காரை கலாசார மன்றம் கடந்த ஏப்ரல் மாதம் இரண்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபா செலவில் குடும்ப சூழ்நிலை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த வீட்டு கட்டிட பணிகள் நிறைவேற்றி கொடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## காரை இந்துவின் உப அதிபராக திருமதி அரூபா ரமேஷ் நியமனம்



விஞ்ஞான பாட ஆசிரியராக யாழ் மத்திய கல்லூரியில் கடமையாற்றிய திருமதி அரூபா ரமேஷ்(அதிபர் தரம் III) 04.03.2020 முதல் காரை இந்துவில் உப அதிபராக வடமாகாணத்தின் கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கல்விமானி, கல்வி முதுமாணி பட்டாங்களைப் பெற்றுள்ளார். காரை இந்துவின் அதிபராக காரைநகரைச் சேர்ந்த திரு.அரியரட்ணம் ஜெகதீஸ்வன் 06.12.2019 முதல் நியமனம் பெற்றார். அதுவரை பதில் அதிபாக கடமையாற்றி வந்த காரைநகரை சேர்ந்த திருமதி சிவந்தினி வாகீசன் அவர்கள் உபஅதிபராக பணியாற்ற விருப்பமின்மை காரணமாக மாற்றம் பெற்று சென்றுள்ள நிலையில் திருமதி அரூபா ரமேஷ் அவர்கள் உப அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

## காரை இந்துவில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட காணிகளிற்கு எல்லை வேலிகள் அமைக்கப்பட்டன

காரை இந்துவின் வடக்கு வளாகத்துடன் இணைந்த காணிகள் கனடா பழைய மாணவர் சங்கத்தினரின் நிதி உதவியுடன் இரண்டு பரப்பு காணியும், பழைய மாணவர் சங்கம் கொழும்பு கிளையினரின் நிதி உதவியுடன் 3 பரப்பு காணியும், பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் 10 பரப்பு காணியும் கடந்த ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டிருந்தன. இந்த காணிக-ளின் கிழக்கு பக்கத்திற்கு கொங்கிறீற் தூண்கள் நிறுத்தப்பட்டு முட்கம்பியிலான வேலைகள் அமைப்பதற்கு பழைய மாணவர் சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி களினால் பிரபல தொழிலதிபர் திரு.சிதம்பரப்பிள்ளை நேசேந்திரன் அவர்கள் நிதியு தவியுடன் ஒரு இலட்சத்து எண்பத்திநாலாயிரம் ரூபா செலவில் எல்லை வேலி அமைக்கப்பட்டுள்ளது.







## பல்கலைக்கழகம் செல்ல தகுதி பெற்ற மாணவர்களிற்கு பிரதேச சபையினரின் வாசிப்பு மாத நிகழ்வில் கௌரவம்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு காரைநகர் பிரதேச சபை மண்டபத்தில் 18.12.2020 அன்று பிரதேச சபை தலைவர் திரு.வி.கேதீஸ்வரதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் காரைநகர் இந்துக் கல்லூரி, யாழ்ற்ரன் கல்லூரி ஆகியவற்றில் இருந்து 2019ம் ஆண்டு க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழகத் திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் பரிசில்கள் வழங்கி பராட்டி கௌரவிக்கப்பட்டனர். காரை இந்துவில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான 9 மாணவர்களுடன் உபஅதிபர் திருமதி அரூபா ரமேஸ் அவர்களும் கலந்து கொண்டனர். பிரதேச சபை உறுப்பினர்கள் இவர்களிற்கான பரிசில்களை வழங்கி கௌரவித்தனர்.







## முன்னாள் அதிபர் K.K.நடராஜா மறைவு



காரைநகர் இந்துக்கல்லூரி, யாழ்ற்ரன் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியா கல்லூ ரிகளின் முன்னைநாள் அதிபர் திரு.கே.கே.நடராசா அவர்கள் 17.12.2020 அன்று இயற்கை எய்தினார்.

கல்வியை கண்ணாக கொண்டு காரைநகரின் கல்வி வளர்ச்சிக்கு கலங்கரை விளக்காக இருந்தவர்களில் அமரர் கே.கே.நடராசா அவர்கள் காரைநகர் மக்களிடத்தில் முக்கிய இடத்தை பெற்றுள்ளவர். அதிபராக பதவியேற்ற பாடசாலைகளில் தன்னுடைய காலத்தில் மாணவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்துவதற்காக பெரும் பாடுபட்டு உழைத்ததுடன், இவருடைய காலத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக காணப்பட்டது. ஆசிரிய பணியுடன் பொதுப்பணியிலும் பெரும் நாட்டத்துடன் செயற்பட்ட அமரர் கே.கே.நடராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடைய காரைநகர் மக்கள் தில்லைகூத்தன் திருவடிகளை பிரார்த்திக்கின்றனர்.

## சாம்பசிவம்-ஞானாமிர்தம்
## அல்லது
## நன்னெறிக் களஞ்சியம்

*காரைநகர் சம்பந்தர்கண்டியை சேர்ந்த அ.நாகலிங்கம் என்னும் பெரியவரால் இயற்றப்பட்டு 1927ம் ஆண்டு கோலாலம்பூர் எஸ்.லாஸர் அண்டு ஸன்ஸ் நிறுவனத்தால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட சிறுகதை 'சாம்பசிவம் - ஞானாமிர்தம் அல்லது நன்னெறிக் களஞ்சியம்' என்னும் நூல். இற்றைக்கு நூறு ஆண்டுகளிற்கு முன்னர் காரைநகர் கிராமத்தில் இருந்து மலேசியா, சிங்கப்பூர் நாடுகளிற்கு வேலை வாய்ப்புகளுக்காக இடம் பெயர்ந்து சென்ற காரைநகர் மக்களின் கதை. ஒரு குடும்பத்தின் மூலமாக இக்கதையினை இன்றைக்கும் பொருந்தும் வகையில் சம்பவங்களும் ஊரின் நிலமைகளும் வரலாற்றாக பதியப்பட்டிருக்கும். இக்கதை ஒரு இலக்கிய நயம் வாய்ந்த ஒரு படைப்பாகும். காலத்தின் கட்டாயம் கருதியும் காரை மண்ணின் பெருமகனார் அமரர் அ.நாகலிங்கம் அவர்களின் பொதுப்பணி மற்றும் சிறப்பு கருதி 'எனது ஊர் காரைநகர்' இம்மலரினை மீள்பதிப்பு செய்ய எண்ணியுள்ளது. 350 பக்கங்களைக் கொண்ட இச்சிறுகதையினை 'எனது ஊர் காரைநகர்' ஊடாக மீள்பதிப்பு செய்வதற்காக அமரர் அ.நாகலிங்கம் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் முன்வந்து கேட்டதற்கிணங்க 2020 கொரோனா பேரிடர் காலத்தில் இந்நூலினை வாசித்து அறிந்து கொள்ளவும் தட்டச்சு செய்யவும் போதிய காலம் இருந்துள்ளது. மேலும் இதனை மீள் வெளியீடு செய்வதற்குரிய முழுமையான அனுமதி கிடைக்கப்பெற்றதும் அச்சிடப்பட்டு வெளியிடுவதற்கான முயற்சிகள் வெகுவிரைவில் கைகூடி வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.*
*அந்த வகையில் அச்சிறுகதையில் வரும் ஒரு பகுதியை இத்துடன் எடுத்து வருகின்றேன்.*
*தொடர்ந்து இத்துடன் இந்நூல் ஆசிரியர் அ.நாகலிங்கம் அவர்கள் 1927ம் ஆண்டு இந்நூல் ஊடாக வெளியிட்டிருந்த விண்ணப்பமும் எடுத்து வரப்பட்டுள்ளது.*

தீசன் திரவியநாதன்

'சாம்பசிவம் - ஞானாமிர்தம் அல்லது நன்னெறிக் களஞ்சியம்' என்னும் நூலில் இருந்து அத்தியாயம் 3 இல் இருந்து கீழ்வரும் பகுதி எடுத்து வரப்பட்டுள்ளது. இங்கே எடுத்துவரப்பட்டுள்ள பகுதியில் தமிழ் சொற்கள் நூலின் அசல் பிரதியில் உள்ளது போன்று எடுத்து வரப்பட்டுள்ளது. பல சொற்கள் அதன் கருத்தும் அர்த்தம் கருதியும் விளக்கத்தன்மை கருதியும் ஒரே சொற்கள் பிரித்து எழுதப்பட்டுள்ளன. இவை நூலின் அசல் தன்மை கருதி உள்ளபடியே எடுத்து வரப்பட்டுள்ளன. நாம் அச்சிடும் போது பிரிந்தவை போன்று தோன்றினாலும் நீங்கள் வாசிக்கும் போது இலகுவாக புரிந்து கொள்ள கூடியதாக இருக்கும் என்பதை முழுமையான நூலினை வாசிக்கும் போது விளங்கிக் கொள்ளலாம்.

அத்தியாயம் 3 இல் இருந்து.......

ஐக்கிய மலாய் நாட்டின் தலைநகராயுள்ள கோலாலம்பூர் என்னும் பட்டினத்தில் அரசாங்க உத்தியோகப் பகுதிகளிலொன்றில், தலைமை லேகர் உத்தியோகம் பார்த்து வந்தவராகிய சபாபதிப்பிள்ளை யென்பவர், ஒரு நாட் சாயங்காலம் ஐந்து மணியளவில், தன் மனைவி தங்கம்மாளுடன் கைக்காடியில் சென்ரூல் என்ற இடத்திற்குத்குத் தன் சினேகித உத்தியோகஸ்தர் களுளொருவராகிய சங்கரப்பிள்ளை யென்பவரைக் கண்டு தெரிசிச்குமாறு போயிருந்தனர். சங்கரப்பிள்ளையின் வீட்டுக்குச் சென்றதும், சங்கரப்பிள்ளையின் மனைவி பொன்னம்பாள், தங்கம்மாளைப் பார்த்து "வாருங்கள், வாருங்கள், நெடுநாட்க ளாகயிந்தப் பக்கம் நீங்கள் வரவில்லை, முன்னர் அதிகமாக வருவீர்கள்", என்று சொல்லி யறைக்குள்ளே தங்கம்மாளை யழைத்துக் கொண்டுபோய் நாற்காலி கொடுத்து உட்கார வைத்தாள்.

வீட்டின் தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த சாய்நாற் காலி மீதுட்கார்ந்து கொண்டு சங்கரப்பிள்ளையும் சபாபதிப் பிள்ளையும் உலக விஷயங்களைப்பற்றியும் தங்கள் உத்தியோக கருமங்களைப்பற்றியும் ஒரு மணி நேரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால், உள்ளே பேசிக்கொண்டிருந்த பெண்மணிகளு க்கோ, கதை ஓய்ந்தபாடில்லை. கவனியாது விட்டால், அவர்கள் விடியும் வரைக்கும் பேசிக்கொண்டே யிருப்பார்கள். அப்பெண் மணிகள் பேசிய கதையிலொரு பாகத்தைக் கூறுவோம்.

பொன்னம்மாள் - "நீங்கள் உடுத்திருக்கும் சேலையை யெங்கிருந்து எடுப்பித்தீர்கள்? நல்ல அழகான சேலையாயிற்றே. இதைவிடப் புதுமாதிரியாக ஓர் மார்வணி(Brooch)யணிந்திருக் கின்றீர்களே, யானு மொன்று இவ்விதம் செய்விக்கவேண்டும்", என்றாள்.

தங்கம்பாள்- " இதுவுமோர் சேலையா? இன்னும் எத்தனை வகையான சேலைகளிருக்கின்றன. இதைத் தான் மதனப்பூர் கத்திரிப்பூச் சேலையென்று சொல்வார்கள். இதைக் காசியிலிருந்து எடுப்பித்தோம். இன்னும் விசேஷமான சேலைகள் எவ்வளவோ யிருக்கின்றன. எனது நாதரிடம் புதுவிதமான சேலைகள் எடுப்பிக்கவேண்டு மென்று கேட்டால், என்னை யடிக்க வந்து விடுவார். யான் பயந்து அவரை யதிகம் கேட்பதில் லை. மார்பணியயைப் பற்றிக் கேட்டீர்கள். இதுதான் தற்கால நாகரீகத்துக் கேற்றதென்று சொல்வார்கள். இன்னும் வித்தியாசங் களேற்படக்கூடும். இதில் றோசாப்பூவும் இலையும் மொட்டும் சேர்ந்திருக்கின்றன. ஆனால் தங்கம் சொற்பம்தான். ஏனாயின் எங்களுக்கு மற்றவர்களைப் போல மேல்வரும்படியில்லை யாதலால் அதிகம் செலவு செய்யக் கட்டாது. பொதுவாக உலகத்தோடொத்ததாகச் சில நகைகளைச் செய்தே வைத்திருக்கின்றேன் ", என்றாள்.

பொன்:- " சேலைகள் விஷயமிருக்கட்டும், என்ன விதமா னாலும் வாங்கிக் கொள்ளலாம். இருக்கிற சேலைகளை யுடுப்பதற்கே தருணமொன்றும் வருவதில்லை. ஆனால் இவ்வித மார்பணி யொன்று அவசியம் யான் செய்விக்க வேண்டும். யான் வைத்திருப்பது அவ்வளவு நாகரீகமாகத் தோன்றவில்லை ", என்றாள்.

தங்க:- " உங்களுக்கென்ன? காசுக்குத்தான் பஞ்சமோ? அவர்தானே (உங்க புருஷன்) பகிரங்க வேலைப்பகுதியில் பெரிய உத்தியோகத்தி லமர்திருக்கின்றார். வரும்படி யதிகம் வருமாத லால் நினைத்ததெல்லாம் செய்விக்கலாம் தானே ".

பொன்:- " அப்படிச் சொல்லாதீர்கள். ஏன் உங்களுக்கு வரும்படி யில்லையோ? உங்கள் புருஷன் பெரிய கந்தோரிலிருக் கின்றாரே, பல சாதிக்காரரும் கொண்டு வந்து வெள்ளி வெள்ளி யாய்க் கொட்டு வார்களே?.

தங்க:- சிரித்துக்கொண்டு, யான் சொல்வதை நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆனால் உண்மையைச் சொல்கிறேன். என் நாதர் கைக்கூலி வாங்குவதே கிடையாது. வலியக் கொண்டு வந்து கொடுத்தாலும் திரும்பிக் கொடுத்து விடுவார். வலிய வந்த வரும்படியை ஏன் விடுவானென்று யான் பேசினால், அவர் கேட்பதில்லை. கைக்கூலி வாங்கிச் சம்பாதிக்கும் பணம் நிலைத்து நிற்கமாட்டா தென்றும் அப்படிச் சம்பாதிப்பதனால் கெடுதிக ளேற்படுக்கூடுமென்றும் சொல்லிவிடுவார்.

பொன்:- " ஏன்? கைக்கூலியால் வந்த செல்வம் ஓடி விடுமாமோ? முன்னரே கல்வீட்டைக் கட்டி விட்டால் தொந்தரவில் லையே. ஆனால் கைக்கூலி வாங்கித்தான் உலகில் கல்வீடு கட்டுகிறார்களென்று யான் இங்கே சொல்ல வரவில்லை. நாங்கள் முன்னரே கல் வீட்டைக் கட்டி விட்டோம். பிள்ளை குட்டியுள்ளவர்களாயிருக்கும் எங்களுக்குச் சம்பளம் மட்டு மெடுத்து என்ன விதமாய்க் காலத்தைத் தள்ளலாம். உங்களுக்கு யான் மெய்யைச் சொன்னாலென்ன. ஆனால் உங்களுக்கு வரும்படி யில்லை யென்பதை யான் நம்ப மாட்டேன்.

**சாம்பசிவம்-ஞானாமிர்தம்**
**அல்லது**
**நன்னெறிக் களஞ்சியம்**
அ.நாகலிங்கம் 1927

உலகத்திலே அப்படியான யோக்கியர்களுமிருக்கின்றார்களா? யான் இங்கே உங்கள் நாயகனை யோக்கிய மற்றவர் என்று கூறவரவில்லை ".

தங்க:- " நீங்கள் நம்பினாலென்ன, நம்பாமல் விட்டா லென்ன, உண்மையைத்தான் யான் சொன்னேன். எங்கள் நடைபாவனைகளில் யாரும் அறிந்து கொள்ளக்கூடும். நகைகள் அணிந்திருக்கிறே னென்று நீங்கள் ஒரு சமயம் விளங்கக்கூடும். எந்த உத்தியோகஸ்தன் வீட்டிலும் தேவையான நகைகளி ருக்கின்றன தான். அதுபோல, அவசியம் தேவையான நகைக ளைச் செய்வித்து வைத்திருக்கிறேனே தவிர, உங்களைப்போல கும்பகோண அட்டியலொன்று, புதுச்சேரி அட்டியலொன்று, இரண்டு விதமான காப்புகள், இருசோடி கொலுசுகள், தங்க மாலைகள், பாவற்கொட்டைச் சங்கிலியொன்று, நெற்சங்கிலி யொன்று, இப்படியாகப் பல நகைகளை யான் வைத்திருக்க வில்லை", என்றாள்.

பொன்:- " சரி-சரி- இதெல்லாமிருக்கக் கட்டும். உங்கள் பிள்ளைகள் என்ன படிக்கின்றார்கள்?"

தங்க:- " மூத்த தம்பி, ஆங்கிலேயம் படிக்கின்றான். தமிழில், நாலாம் புத்தகம் வரைக்கும் கற்றுக்கொண்டான், இளைய வனையும் தங்கச்சி ஞானாமிர்தத்தையும் தமிழ்ப் பாடசாலைக் கனுப்பி யிருக்கின்றோம். உங்கள் பிள்ளைகள் என்ன படிக்கின்றார்கள்?"

பொன்:- " நாங்கள் எல்லோரையும் ஆங்கிலேயம் கற்கவே அனுப்பியிருக் கின்றோம். தற்காலம், ஆங்கில மொழி தான் பெண்களுக்கும் நல்லதென்று சொல்லுகின்றார்கள் ".

தங்க:- " பெண்கள் ஆங்கிலம் படித்து உத்தியோகம் பார்ப்பதற்கா? தமிழைத்தான் நன்றாய்க் கற்கவேண்டும். பெண்களுக்குத் தேவையான தெல்லாம் தமிழிலேயேயிருக் கின்றன. ஆங்கிலம், எமது பெண்மணிகளுக்குத் தேவை யில்லை யென்பதே அனேனகருகடைய அபிப்பிராயம் ".

இப்படியாக இருவரும் பேசிக்கொண்டிருக்கையில், சபாபதிப்பிள்ளை, " ஏன்! வீட்டுக்குத் திரும்புவதில்லையா", என்று மனைவியாருக்குக் கேட்கும்படி சொல்லினர்.

தங்க:- " இதோ வந்து விட்டேன்", என்று பொன்னம்பா ளிடம் விடை பெற்றுக் கொண்டு இருவருமாகக் கைக்காடியில் வீடு திரும்பலாயினர்.

வீட்டிற்கருகே சென்றதும், சபாபதிப்பிள்ளையின் புதல்வியாகிய ஞானாமிர்தம் சிறுவனைக்கண்டதும் விரைந் தோடி வந்து, அவனுடைய அலங்கோலமான நிலையைக் கண்டு மனம் சகிக்காதவளாய் அவனைப்பார்த்து, " நீ யார் ? எங்கிருந்து வந்தாய்? நீ வந்த காரணமென்ன?" என்பதற்குள், ஞானாமிர்தத்தின் மூத்த தமயன் ஓடி வந்து, " அடே! என்னடாப் பயலே! ஏன் இங்கு வந்தாய்? ஓடிப்போய் விடு, நின்றால் அடித்துக் கொன்று விடுவேன் ", என்று வெருட்டினான். அப்பொழுது ஞானாமிர்தம், " அண்ணா! அப்படியாக வெருட்டாதே. பையனுடைய கோலத்தைப் பார்க்குமித்து மிக ஏழையாகத் தோன்றுகின்றான். ஆனால் அவனுடைய முகவழகைப் பார்க்குமிடத்து பெரிய இடத்திற் பிள்ளைபோல எண்ணவேண்டி யிருக்கின்றது. இடர்பட்டு வருபர்களை யடித்துத் துரத்தி விடுவது பெரிய பாவமன்றோ? அவனைத் துன்பப் படுத்த வேண்டாம், அவனுடைய சங்கதியைப் பற்றிக் கேட்போம்", என்றாள். ஞானாமிர்தம் சிறுமியாக விருப்பினும் அச்சிறுவயதிலேயே அடக்கம், பொறுமை, சாந்தம், ஜீவகாருண்யம் முதலிய நற்குண ங்க ளமைந்திருந்தமை மிக வியக்கத்தக்கதே.

(அடுத்த பக்கத்தில் மலரை ஆக்கியோனின் விண்ணப்பம்....) 1927 →

# ஓர் விண்ணப்பம்.

" அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல் " — (நாயனார்)

**பாரத மாதாவின் புத்திர சிகாமணிகளாகிய பிரிய சகோதரர்களே!**

எமது பரதகண்டமாகிய இந்தியாவின் தென்பாகத்துள்ள இலங்காபுரிக்கு வடக்கே, யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த காரையம்பதி யென்னும் ஊரில் மருதடி சித்திவிநாயகராலய த்திற்குத் தென்புறமாகச் சென்றநூற்றாண்டுகளிகு மேலாக அமைக்கப்பட்டுள்ள திருக்குளமானது தற்சமயம் மிக்க ஆபத்தான நிலைமை யிலிருக்கின்றது. இதைப் பழுதுபார்த்து நாற்புறமும் கற்படிகளமைத்து இத்திருத்தொண்டைச் செய்து முடிப்பதற்கு எளியேன்விருப்புற்று இச்சிறு நூலை வெளியிடலானேன். இத்தொண்டைச் செய்து முடிக்க 10,000 ரூபாய் வேண்டியிருக் கின்றது. இந்நூலின் தற்சமயம் 1,000 பிரதிகளே அச்சிடப்ப ட்டிருக்கின்றன. அச்சுக்கூலிக்கும் மற்றும் செலவுகளுக்குமாக 800 வெள்ளி செலவாய்விட்டது. ஆகவே செலவு நீங்க மேற் சொன்ன தொகையை இவ்வாயிரம் புத்தகங்களைக் கொண்டே சேர்க்கவேண்டியிருப்பதால், பரோபகார சீலர்களும். மற்றும் சமயாபிமானிகளும் இதற்குதவி செய்து எம்மை ஊக்கப் படுத்திவிடுமாறு மன்றாட்டமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேம். இன்னுமொரு விஷயம் இங்கே குறிப்பிடத்தக்க தென்ன வெனில், நாள்வீதம் நூ ற்றுக்கணக்கான ஜனங்கள் வந்து ஸ்நானஞ் செய்தும், ஆடு மாடுகள் நீரருந்தியும் வருகின்ற மேற் சொன்ன இத்திருக்குளத்தைத் திருத்திவைப்பதற்கு எளியேன் எடுத்துக்கொண்டமுயற்சியை ஊக்கப்படுத்திவிடுமாறு மலாய் நாட்டைச்சேர்ந்த நகரிசெம்பிலான் மகாண சுதேச மன்னர் சேர் முகமது ஷா அவர்களைக் (Sir, Mohamed Shah, K.C,M.G.K.C.V.O., His Highness the Yang di Pertuan Besar Of Negri Sembilan) கண்டு கேட்டதில் அவர் உடனே 100 வெள்ளி கொடுத்துதவியிருக்கி ன்றனர். இவருடையபரோபகார சிந்தனை யை நாம் பெரிதும் பராட்டுகின்றோம். முதன் முதல் இத்தொண்டி ற்காக ஊக்கப்படு த்திய மன்னரைப்போல் மற்றும் பரோபகார சீலர்களும் அபிமா னிகளும் முன்வருவார்களானால் எமது கோரிய காரி யம் கூடிய சீக்கிரத்தில் கைகூடு மென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை.

ஆனதால் நண்பர்காள்!

உலகில் நாமிருப்பது நிச்சயமல்ல. இருக்கும் பொழு தே அறங்களைச் செய்யவேண்டும். பின்னாற் செய்வோ மென்று நாளைப் பின் போக்கினால் நாம் கடைத்தேற மாட் டோம்.

" காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார் - மாலைக்
கிடத்தான் எழுதல் அரிதால்மற் றென்கொல்
அறங்காலை செய்யாத வாறு. " — (அறநெறிச்சாரம்)

என்பது ஆன்றோர் திருவாக்கும். இனி, அறங்களுள்ளும் பழுத டைந்திருக்கும் ஆலயங்கள், கேணிகள், கிணறுகள், குளங்கள், மடங்கள் முதலியனவற்றைப் பழுதுபார்த்து வைப்பதே மிகவும் மேலான தர்ம மென்பது உங்கள் எல்லீருக்கும் சொல்லாமலே விளங்கும். ஆனதால் அன்பர்களே! இவ்விஷயத்தை யனுகூல மடையச் செய்வதற்கு உதவிபுரிய முன் வாருங்கள்! பரம்பொருள் கிருபை பாலிப் பாராக.

இங்ஙனம்,
ஆக்கியோன்.

**குறிப்பு:-** இத்திருத் தொண்டிற்காக உதவி புரிந்து புத்தகம் வாங்கும் ஒவ்வொருவருடைய பெயரும் விலாசமும், கொடுக்கும் தொகையும், பிரபல்யமான தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவிடப்படும்.

---

(1927ம் ஆண்டு வெளியிடப்பட்ட '**சாம்பசிவம்-ஞானாமிர்தம் அல்லது நன்னெறிக் களஞ்சியம்**' நூலாசிரியர் அ.நாகலிங்கம் அவர்களால் தனது நூலில் எடுத்து வரப்பட்ட விண்ணப்பம்)

## களபூமி கல்வி அபிவிருத்தி கழகம்

களபூமி கல்வி அபிவிருத்தி கழகம் கடந்த ஆண்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு, களபூமி பாடசாலைகளின் கல்வி வளர்சியில் பங்காற்றும் வகையில் முதற்கட்டமாக 50 இலட்சம் ரூபாய்களை நிரந்தர வைப்பிலிட்டு அதன் மூலம் பணியினை தொடர திட்டமிடப்பட்டது.

அதற்காக இலண்டனில் வதியும் களபூமியை சேர்ந்த பலரும் முன்வந்து ஒத்துழைப்புக்களை வழங்கினர். தொடர்ந்து நிதி சேகரிப்பில் இலண்டனில் இருந்து 50 இலட்சம் ரூபாய்களிற்கு மேற்பட்ட நிதியினை வழங்க மக்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டனர்.

கடந்த நவம்பர் மாதம் வரை 35 இலட்சம் ரூபாய்கள் வரையான நிதியினை பதிவு செய்தவர்கள் வழங்கியிருந்தனர். பெறப்பட்ட நிதி களபூமி கல்வி அபிவிருத்திக் கழகம் சார்பில் நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ளதாகவும், மேலும் நிதி உதவி வழங்க முன்வந்தவர்களிடம் இருந்தும் மேலதிக நிதி பெறப்பட்டு நிரந்தர வைப்பில் இணைத்துக் கொள்ளப்படும் எனவும் களபூமி கல்வி அபிவிருத்திக் கழகம் சார்பில் செய்தி வழங்கவல்ல திரு.
அம்பிகைபாகன் சிவபாதசுந்தரம் அவர்கள் 'எனது ஊர் காரைநகர்' சஞ்சிகைக்கு தெரிவித்துள்ளார்.
இதுவரை நிதி வழங்கியவர்கள் பெயர் விபரம்
அடங்கிய கழகத்தின் விபரம் கழகத்தின் சார்பில் இணைக்கப்பட் டுள்ளது.

### களபூமி கல்வி அபிவிருத்திக் கழகம்
### Kalapoomy Education Development Society

**களபூமி, காரைநகர்**
**Kalapoomy, Karainagar**

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| திரு.கு.சிவஞானசுந்தரம் | திரு.பொ.சிவானந்தன் | திரு.க.விஜயகுமார் |
| 077 9042178 | 077 2642319 | 077 3649242 |

**போசகர்கள்**

திருமதி. விஜயகலா மகேஸ்வரன்
திரு.வே.சாம்பசிவம்
திரு.எஸ்.வி.எம்.குணரட்ணம்
திரு.த.தியாகலிங்கம்
திரு.கு.சரவணபவானந்தசர்மா
திரு. சுப்பிரமணியம் மனோகரன்
திரு.சிதம்பரப்பிள்ளை தேசேந்திரம்
திரு.சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன்

**நிர்வாக அங்கத்தவர்கள்**

உபதலைவர்: திரு.சி.கபிலன்
உபசெயலாளர்: திருமதி.சோ.செல்வராணி
திரு.கு.அகிலன்
திரு.மு.தவபாலன்
திரு.மு.பரம்தில்லைராஜா
திரு.த.சுதர்சன்
திருமதி.த.ரஞ்சினி
திருமதி.இ.கலைமகள்

**கல்வி ஆலோசனைக் குழு**

திரு.க.தில்லையம்பலம்
திருமதி.தி.விக்னேஸ்வரி
திரு.இ.திருப்புகழூர்சிங்கம்
திரு.பொ.விஜயகுமார்
திரு.தே.சுரேஸ்
திரு.க.சண்முகநாதன்
திரு.ச.மனோகரன்
திரு.ச.சுகந்தன்
திரு.பொ.சிவரஞ்சன்
திருமதி.த.அனுசியா

**கணக்காய்வாளர்கள்**

திருமதி.சி.கவிதா
திரு.ப.கண்ணதாசன்

களபூமி கல்வி அபிவிருத்தி கழகத்தின் உருவாக்கத்துக்கும் அதன் தொடர் செயல்பாடுகளுக்கும் நிதி உதவி வழங்க முன்வந்த பிரித்தானிய வாழ் களபூமி மக்களில் இதுவரை தமது பங்களிப்பை வழங்கியவர்களின் விபரம்

1. சிவசுப்ரமணியம் மகேஸ்வரன் 1000
2. பொன்னம்பலம் காந்தருபன் 1000
3. கிருபானந்தம் யசோதரன் 1000
4. குலரத்தினம் பரராசலிங்கம் 1000
5. கணேசபிள்ளை சிவகுமார் 1000
6. சபாரத்தினம் பிரபாகரன் 1000
7. அம்பிகைபாகன் சிவபாதசுந்தரம் 1000
8. அம்பிகைபாகன் மீனாட்சிசுந்தரம் 1000
9. திருநாவுக்கரசு வசந்தன் 1000
10. கந்தசாமி சசிகாந்தன் (சசி) 700
11. தர்மலிங்கம் சுதானந்தன் 500
12. குலரத்தினம் சர்வானந்தலிங்கம்(சர்வா) 500
13. கந்தையா பரமேஸ்வரன் 500
14. பொன்னுத்துரை சிவரூபன 500
15. குலசேகரம் காசிநாதன் 500
16. குலசேகரம் அருளேந்திரன் 500
17. பரமசாமி கமலச்சந்திரன் 500
18. தம்பிஐயா சிவகரன் 500
19. பேரம்பலம் கோபாலகிருஷ்ணன் 500
20. கந்தசாமி சண்முகலிங்கம் 300
21. கனகரட்ணம் கஜேந்திரன் 300
22. பாலேந்திரன் கனகேஷ் 300
23. சுப்பிரமணியம் பரமேஸ்வரன் 250
24. சபாநடேசன் மனோகரன் 250
25. செல்லையா கிருபாகரன் 250
26. இரத்தினசிங்கம் மயூரன் 250
27. சுப்பிரமணியம் சரவணபவன் 250
28. சோமசுந்தரம் அருள் (ARV) 100
29. செந்தில்நாதன் கீரன் 100
30. கந்தையா வீரசிங்கம் 100
31. முருகேசம்பிள்ளை நரேந்திரன் 100
32. சிற்றம்பலம்(ஓவசியர்)சிறி 22000ரூபா(இலங்கை)
33. களபூமி ஒன்றியம் (பிரித்தானியா) 200000ரூபா(இலங்கை)

களபூமி கல்வி அபிவிருத்தி கழகத்தினுடைய பயணம் நீண்டது. அதன் நிதி தேவைகளும் அவ்வாறே. ஏற்கனவே தமது பங்களிப்பை உறுதி செய்த பல அன்பர்களிடம் தவிர்க்க முடியாத காரணங்களால் (முக்கியமாக இந்த Coronavirus பேரிடர் காலத்தில்) நிதி இன்னும் சேகரிக்கப்படவில்லை. அது பற்றிய விபரம், நிதி எமக்கு கிடைக்கப் பெற்றதும் அறிய தருகிறோம்.

•2019/2020 கணக்காய்வு நடவடிகைகள் (Audit) நடைபெறுவதனால் ஏதாவது தவறுகள் இருந்தால் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்

நன்றி

P. Sivanantha

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|



**மிஸிஸ் முருகேசு:** என்னத்துக்கு யோகா செய்து முடிய குசினியுக்கை போய் சீனிப் பேணியைத் திறந்து பாக்கிறியள்.

**சோம்பல் முருகேசு:** sugar குறைஞ்சிருக்கோ எண்டு பார்க்கத்தான்

## 2020ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் : காரைநகர் ஆரம்ப பாடசாலைகள்

1. வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை(அப்புத்துரை) எட்டு மாணவர்கள்
   1. பரமேஸ்வரன் சுஜாதா — 187 புள்ளிகள்
   2. கிருஸ்ணகுமார் தேனுஜா — 181 புள்ளிகள்
   3. பாரதி கவினஜா — 177 புள்ளிகள்
   4. சிவரஞ்சன் நிதீஷன் - 177 புள்ளிகள்
   5. ரவிநாதன் கலைநிலவன் - 175 புள்ளிகள்
   6. யோகலிங்கம் கல்யாணி — 171 புள்ளிகள்
   7. குமாரசேகரன் அஷ்வினி — 167 புள்ளிகள்
   8. கணேசமூர்த்தி தனுஷா — 163 புள்ளிகள்

2. யாழ்ற்றன் கல்லூரி கனிஷ்ட வித்தியாலயம் - ஒரு மாணவி
   சிதம்பரநாதன் நிகேதனா - 160 புள்ளிகள்
   **இன்னொரு மாணவன் (ஏ.கஜானன் - 159 புள்ளிகள்)**

3. சுப்பிரமணியம் வித்தியாசாலை - நான்கு மாணவர்கள்
   1. ரஜீவன் கிஷான் - 184 புள்ளிகள்
   2. கேதீஸ்வரன் சுதர்சன் - 181 புள்ளிகள்
   3. தர்மேஸ்வரன் டர்சிகன் - 167 புள்ளிகள்
   4. அருளானந்தன் அஸ்வினி - 162 புள்ளிகள்

4. தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாசாலை மூன்று மாணவர்கள்
   1. விஜயரத்தினம் லோகிஷன் - 170 புள்ளிகள்
   2. கருணைவேல் அன்பழகன் - 167 புள்ளிகள்
   3. தினேஸ்குமார் தமிழரசி - 162 புள்ளிகள்

5. வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை(சடையாளி) இரண்டு மாணவர்கள்
   1. சிவகுமார் டனோஜன் - 172 புள்ளிகள்
   2. சிவராசா அபிநயா - 163 புள்ளிகள்

6. மெய்கண்டான் வித்தியாசாலை — இரண்டு மாணவர்கள்
   1. கமலதாசன் கபினாஷ் - 168 புள்ளிகள்
   2. இராசதுரை உதர்சனா - 164 புள்ளிகள்

7. சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை — ஒரு மாணவி
   சோதிநாதன் கம்சிகா - 175 புள்ளிகள்

8. வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாசாலை - ஒரு மாணவி
   சிவலிங்கம் வனஜா - 166 புள்ளிகள்

9. ஊரி அ.மி.த.க பாடசாலை - இரண்டு மாணவர்கள்
   1. மோகனதாசன் கோபிதன் - 166 புள்ளிகள்
   2. யோகராசா கஜானி - 161 புள்ளிகள்

10. ஆயிலி சிவஞானோதயா வித்திசாலை - ஒரு மாணவன்
    கமலவாசன் யர்ஷிகன் - 166 புள்ளிகள்
    **இன்னொரு மாணவி (செல்வகுமார் கனுசிகா 159 புள்ளிகள்)**

11. வியாவில் சைவ வித்தியாசாலை -

12. பாலாவோடை அ.மி.த.க.பாடசாலை - (இயங்கவில்லை)

மொத்தம்: 158 மாணவர்கள் காரைநகர் ஆரம்ப பாடசாலைக-ளில் இருந்து 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்தார்கள். இவர்களில் 25 மாணவர்கள் புலமை சித்தி பெற்றுள்ளார்கள். 145 மாணவர்கள் 70 புள்ளிகளிற்கு மேல் பெற்று சாதாரண சித்தியடைந்துள்ளார்கள். 13 மாணவர்கள் மெல்லக்கற்கும் மாணவர்கள்.

| | பாடசாலை | தோற்றியோர் | புலமை சித்தி | 70க்கு மேல் |
|---|---|---|---|---|
| 1 | யாழ்ற்ரன் கல்லூரி | 27 | 01 | 21 |
| 2 | சுப்பிரமணியம் வித்தியாசாலை | 20 | 04 | 19 |
| 3 | ஊரி அ.மி.த.க. பாடசாலை | 20 | 02 | 19 |
| 4 | மெய்கண்டான் வித்தியாசாலை | 05 | 02 | 5 |
| 5 | வலந்தலை வடக்கு அ.மி.த.க (சடையாளி) | 14 | 02 | 14 |
| 6 | வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாசாலை | 08 | 01 | 08 |
| 7 | ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை | 06 | 01 | 06 |
| 8 | வலந்தலை தெற்கு அ.மி.த.க(அப்புத்துரை) | 25 | 08 | 24 |
| 9 | வியாவில் சைவ வித்தியாசாலை | 06 | 00 | 06 |
| 10 | சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை | 09 | 01 | 07 |
| 11 | தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாசாலை | 18 | 03 | 16 |
| 12 | பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை(இயங்கவில்லை) | - | - | - |
| | மொத்தம் | 158 | 25 | 145 |

## வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை
## (அப்புத்துரை)



ப. சுஜாதா
187 புள்ளிகள்



கி.தேனுஜா
181 புள்ளிகள்



பா. கவினஜா
177 புள்ளிகள்



சி.நிதீஷன்
177 புள்ளிகள்



ர.கலைநிலவன்



யோ.கல்யாணி



கு.அஷ்வினி



க.தனுஷா

## சுப்பிரமணியம் வித்தியாலயம்



ற.கிஷான்
184 புள்ளிகள்



கே.சுதர்ஷன்
181 புள்ளிகள்



த.டர்சிகன்
167 புள்ளிகள்



அ.அஷ்வினி
162 புள்ளிகள்

## தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலயம்



**வி.லோகிஷன்**
170 புள்ளிகள்



**க.அன்பழகன்**
167 புள்ளிகள்



**தி.தமிழரசி**
162 புள்ளிகள்

## வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாசாலை



**சி.வனஜா**
166 புள்ளிகள்

## மெய்கண்டான் வித்தியாலயம்



**க.கபினாஷ்**
168 புள்ளிகள்



**இ.உதர்சனா**
164 புள்ளிகள்

## வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை (சடையாளி)



**சி.டனோஜன்**
172 புள்ளிகள்



**சி.அபிநயா**
163 புள்ளிகள்

## சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை



**சோ.கம்சிகா**
176 புள்ளிகள்

## யாழ்ற்ரன் கல்லூரி (கனிஷ்ட பிரிவு)



**சி.நிகேதனா**
160 புள்ளிகள்

## ஊரி அ.மி.த.க. பாடசாலை



**மோ.கோபிதன்**
166 புள்ளிகள்



**யோ.கஜானி**
161 புள்ளிகள்

## ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை



**க.யர்ஷிகன்**
**166 புள்ளிகள்**

## யாழ் பல்கலைக்கழக இசைத்துறை தலைவராக செல்வி பரமேஸ்வரி கணேசன் நியமிக்கப்பட்டுள்ளார்



யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் இசைத்துறைத்தலைவராக காரைநகரை சேர்ந்தவரும், நாதஸ்வர கலைஞர் N.K.கணேசனின் புதல்வியுமான செல்வி பரமேஸ்வரி கணேசன் அவர்கள் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

செல்வி பரமேஸ்வரி கணேசன் அவர்கள் கர்நாடக இசையில் M.A, M.Phil ஆகிய பட்டங்களைப் பெற்று கர்நாடக இசைத்துறையில் யாழ் பல்கலைக்கழக இசைத்துறையில் மூத்த விரிவுரையாளராக பணியாற்றி வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுவிஸ் காரை அபிவிருத்தி சபை, கனடா காரை கலாசார மன்றம் இணைந்து காரை மக்களிற்கு கொரோனா நிவாரணம் வழங்கியது

கொரோனா நோய் இடர் காலத்தின் போது காரைநகர் அபிவிருத்தி சபை யின் ஊடாக சுவிஸ் காரை அபிவிருத்தி சபை மற்றும் கனடா காரை கலாசார மன்றம் இணைந்து காரைநகரில் உள்ள 1200 குடும்பங்களிற்கு குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கைக்கு ஏற்ப காரைநகர் கடைகளில் உணவு பொருட்களை பெற்றுக்கொள்ள நிதிச்சிட்டைகளை வழங்கியிருந்தனர். கனடா காரை கலாசார மன்றம் 7 இலட்சம் ரூபாய்கள் வரையான நிதியினை யும் சுவிஸ் காரை அபிவிருத்தி சபை 5 இலட்சம் ரூபா வரையான நிதியினையும் வழங்கியிருந்தன. ஒரு நபரை தலைமைத்துவமாக கொண்ட குடும்பத்திற்கு 650 ரூபாவும், இரண்டு நபரைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பத்திற்கு 1000 ரூபாவும், 3 நபரைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பத்திற்கு 1500 ரூபாவும் பெறுமதியான உணவு சிட்டைகளும் காரைநகரில் உள்ள அனைத்து குடும்பத்தினருக்கும் வழங்கப்பட்டிருந்தன.

## காரைநகர் பாடசாலைகளில் கல்வி கற்று 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் குறிப்பிடத்தக்க சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்ட மாணவர்கள் விபரம் பாடசாலைகள் ரீதியாக வருமாறு:

**காரைநகர் இந்துக் கல்லூரி**
விஜயகுமார் கஜந்தினி 8A,1B
கந்தவேள் தர்சிகா 6A,3B
கருணாகரன் பகீரதன் 6A,1B,2C
கந்தேஸ்வரன் சுகந்தினி 5A,B,3C
யோகராசா அபிசா 5A,2B,2C
பாரதி தர்ணிகா 4A,2B,2C
கதிர்காமநாதன் தனுசியா 4A,3B,2C
சிவநேசன் சர்வேஸ்வரன் 4A,3B,2C
விஜயகுமார் விஜிதா 4A,3B,2C
சுதாகரன் சுஜிர்தன் 3A,4B,2C
மதியழகன் அபிதா 3A,3B,3C
ஜெயமோகன் திருக்குமார் 4B,2C,3S

**யாழ்ற்ரன் கல்லூரி**
கதிர்காமநாதன் அருட்செல்வி 7A,B,S
எஸ்.சுகன்ஜா 6A,B,C,S
கோ.இனியவன் 6A, 2B, C
எஸ்.அருள் 6A,2B, C

**சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்.**
இராசரத்தினம் தமிழினி 7A,2B
அ.அனுரேகா 2A,2B,4C
பி.நிபின்சலா A,2B, 2C,3S
வி.நிசானி 2B, 6C, S
தி.திருச்செல்வி B, 3C, 3S




## யுத்த காலத்தின்(1991-1996)போது காரை இந்துவின் அதிபராக துணிச்சலான பணியாற்றிய திருமதி தேவநாயகி பாலசிங்கம் அதிபரின் மறைவு:




காரைநகர் இந்துக்கல்லூரியின் விலங்கியல் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றிய பின்னர் அதிபராக காரை இந்துவில் பொறுப்பேற்றுக்கொண்டவர். காரைநகரின் இடப்பெயர்வின் போதும் பாடசாலையின் ஆவணங்களை பேணி பாதுகாத்து பின் மீண்டும் குடியமர்வின் போது பாடசாலையினை மீண்டும் துரிதமாக ஆரம்பித்து துணிச்சலாக பணியாற்றியவர் திருமதி தேவநாயகி பாலசிங்கம் அவர்கள். கொழும்பு வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயத்தின் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.
தனது ஓய்வு காலத்தின் பின்னரும் திறந்த பல்கலைக் கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளராகவும் கல்விப்பணியினை தொடர்ந்து வந்தார். 23.02.2020 அன்று கொழும்பு வெள்ளவத்தையில் சிவபதம் அடைந்தார். காரை இந்துவின் வளர்ச்சியில் தன்தடம் பதித்து சென்ற ஆசிரியையின் ஆத்மா சாந்தியடைய காரை மக்கள் பிரார்த்திப்போமாக.

## மெய்கண்டான் வித்தியாசாலையில் இருந்து புலமைச்சித்தி பெற்ற மாணவர்களிற்கு பரிசில்கள்…

மேற்படி பாடசாலையின் பழைய மாணவரும் சக்தி இலவச கல்வி மேம்பாட்டு நிலைய இயக்குனருமாகிய திரு.நா.இந்திரன் அவர்களின் அனுசரணையில் சித்தி பெற்ற மாணவர்களில் வெட்டுப்புள்ளிகளிற்கு மேற்பெற்ற மாணவர்களிற்கு துவிச்சக்கர வண்டியும், மற்றைய மாணவர்களிற்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி கௌரவித்தார் திரு.நா.இந்திரன் அவர்களின் தாயார் திருமதி நா.பராசக்தி அவர்கள்.

அத்துடன் திரு.ச.கருணாகரன்(சுவிஸ்) அவர்களின் அன்பளிப்பாக மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்கும் முகமாக சித்தி பெற்ற மாணவர்களிற்கு நிதி உதவி வழங்கி கௌரவித்தார் திரு.மூ.சதாசிவம் அவர்கள்.









## மன்னிப்பு

மனிதனுக்கு கிடைத்த
மகத்தான வரம் மன்னிப்பு…………..
தவறுகளுக்கு தண்டனையே
தெய்வீகமான மன்னிப்பு………………
பகையை உறங்க வைப்பது
பௌத்திரமான மன்னிப்பு…………….
பேசித் தீராதவற்றையும்
யாசித்தே தீர்க்கும் மன்னிப்பு………….
மண்ணுக்கு மழை போல
மனசுக்கு பாவ மன்னிப்பு ……………..
விட்டுக் கொடுத்து வாழ்வதே
விவேகமான மன்னிப்பு……………….
உடைந்து போன காதலின்
உயிர் சுவாசமே மன்னிப்பு…………….
நிலவுக்கு காவல் வானம்
நிம்மதிக்கு என்றும் மன்னிப்பு………..
நட்புறவின் மன வலியினை
நகர்த்துவதே மன்னிப்பு…………….
நொருங்கிய மனசுக்கு
நேசமாவதே மன்னிப்பு…………..
துயரத்தில் ஏங்கும் இதயத்தை
தூங்க வைப்பது மன்னிப்பு………….
குடும்ப விரிசல்களையும்
குணமாக்குமே மன்னிப்பு…………….
சந்தேகங்களை உடைத்து
சந்தோஷமாக்கும் மன்னிப்பு……….
அன்பில் விழுந்த கீறலுக்கும்
ஆரோக்கியமே மன்னிப்பு………….
கண் இமைக்க மறந்தாலும்
கற்றுக் கொள் மன்னிப்பு…………….
வாழ்க்கைப் புத்தகத்தின்
வார்த்தைகளே மன்னிப்பு…………….

ஸ்வரங்கள் --- செல்வி



யாழ்ற்ரன் கல்லூரி கனிஷ்ட வித்தியாலயத்தில் இருந்து புமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி சி.நிகேதனாவிற்கு திரு.நா.இந்திரன் அவர்களினால் ஊக்குவிப்பு பரிசாக துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது. யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் திரு.தில்லையம்பலம் மதிவதனன் அவர்கள் அதனை வழங்கி வைத்தார்.



**எழுதிக்கொள்ளுங்கள்...**



உச்சி வெயிலில்
உயிரை கண்களில் ஏந்தி
கையில் குழந்தையுடன்
கண்களில் தேடலுடன்
நிற்பது ஏன்

இதுதான் உங்கள் கேள்வியா?

எழுதிக்கொள்ளுங்கள்
எதுவுமே பயனற்றவை
காற்றடிக்கையில்
தம் இயலாமைக்காக
என் காலில் வீழ்ந்து
மன்னிப்புக்கேட்கும்
காகிதங்கள் தான் இவை
எழுதிக்கொள்ளுங்கள்...

சுகந்திரக்காற்றென்பர்
சொல்லுங்கள் குறையென்பர்
அத்தனையும் எழுதிகொண்டு
ஆதராவாய் எமை அணைத்து
சித்திரமாய் சிரித்து சென்றிடுவர்
எழுதிக்கொடுத்த காகிதங்கள்
எங்குதான் சென்றிடுமோ
வருந்துகின்ற எம்குறையோ வற்றாத நதியாகும்
சென்றுவிடும் காகிதத்திற்கு
நீங்கள் எழுத இருக்கும் காகிதமும்
உறவு என்று நானறிவேன்
எழுதிக்கொள்ளுங்கள்...

துன்பத்தில் நாம் இருக்கையில்
துயர் கேட்க எவருமில்லை
எல்லாம் முடிந்தபின்
எம்மை ஒரு மலராக்கி
எத்தனை எத்தனை வண்டுகள்.

வண்டுகள் மலரில் தேனெடுக்க வருமேயன்றி
மலரின் தேவைக்காக வருவதில்லை
மலரின் பெயரை வைத்து
எத்தனை வயிறுகள் நிறைகின்றன
எத்தனை வசந்தம் வந்தாலும்
மலர்மட்டும் கடைசியில் உதிர்ந்துதான் போகின்றது
உரிமைகள் எல்லாம் அழிந்துதான் போகின்றன
பாடிவந்த வண்டினத்தில் நீங்களும் ஒன்றுதானே
எழுதிக்கொள்ளுங்கள்...

உங்கள் கேள்விக்கு விதம்விதமாய்
பதில் தந்தநேரம்
கேள்வியான எம்வாழ்வை
கேள்வியாக்கியவரின் நல்லெண்ணத்தை
கேட்போர் எல்லாம்
வியந்து பார்க்கும் வண்ணம் வசனமெழுதி
வல்லரசு வியந்து நோக்க இங்கு
நல்லரசு இருந்தது காண்
நாமெல்லாம் முதுகெலும்பற்றவர்கள் அல்ல
முதுகெலும்பு முறிக்கப்பட்டவர்கள்
என்னும் செய்தியை
முன்னால் நாம் போக
பின்னால் வரும் சந்ததிக்கு
வரலாறாய் எழுதுவதற்கு
வரிகளை நான் தேடுகின்றேன்

அவையும்
வசந்தத்தில் நனைவதற்கு
வரிசையில் நிற்கின்றனவோ
காணவேயில்லை.

நீங்கள் எழுதிக்கொண்டீர்கள்தானே....

துளசிதன்
(கனடா)



**சோம்பல் முருகேசு:** இப்ப இருபத்தைஞ்சு வரியமா என்னில பிழை பிடிக்கிறதே உன்ரை வேலையாப் போச்சு.

**மிஸிஸ் முருகேசு:** இருபத்தைந்சு வரியம் இல்லை இருபத்தியாறு வரியம்

இச்சஞ்சிகையில் ஆங்காங்கே எடுத்து வரப்பட்டுள்ள நகைச்சுவை துணுக்குகள் 'காரைக்கவி கந்தையா பத்மநாதன்' அவர்களினால் எழுதப்பட்டவை.

# அறக்கொடைச்செம்மல் காரை மண்ணின் மைந்தன் திரு.சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அவர்களின் காரை மண்ணிற்கான மகத்தான பணிகள் 2020



## காரைநகர் வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணம்

அறக்கொடைச்செம்மல் காரை மண்ணின் மைந்தன் திரு.சுப்பிரமணியம் கதிர்காமநாதன் காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கு 02.07.2020 அன்று பலமில்லியன் ரூபா செலவில் மகப்பேற்று தாய்மார்களை பரி-சோதனைசெய்யும் ஸ்கான் இயந்திரமொன்றை (Ultra sound scan) அன்பளிப்பாக வழங்கினார்.

முன்னதாக இவ்வியந்திரத்தை பொருத்துவதற்கான அறையில் குளிரூட்டி மற்றும் உட்கட்டுமான வேலைகளையும் சிறப்பாக செய்து கொடுத்தார். திரு.நாதன் சார்பாக யாழ் போதனாவைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்கள் ஸ்கான் இயந்திரத்தை சம்பிரதாயபூர்வமாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி A.கேதீஸ்வரன், மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி N.சரவணபவன் மற்றும் பிரதேச வைத்திய அதிகாரி ஆகியோரிடம் கையளித்தார். அதன்பின்பு நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய அனைவரும் திரு.நாதன் மருத்துவத்துறைக்கு ஆற்றிவரும் தன்னிகரில்லா சேவையைப் பாராட்டினர்.



**கொரோனா பேரிடர் நிவாரணம்**

கொரோனா பேரிடர் காரணமாக நாடு முடக்கப்பட்டிருந்த காலத்தில் காரைநகரில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் இரண்டு கட்டங்களாக இரண்டு தடவைகள் அனைவருக்கும் சுமார் 1000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது. இதற்கான ஒத்துழைப்புக்களை காரைநகர் பிரதேச செயலர் வழங்கினார்.





பரோபகாரி திரு.சுப்பிரமணியம் கதிர்காமநாதனால் 51/2 பரப்பு காணி அன்பளிப்பு அன்பளிப்பு செய்யப்பட்டு வேம்படி பக்தர்கேணி வீதியில் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் புதிய கட்டிடம் கடந்த ஒக்டோபர் மாதம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு பணிகள் ஆரம்பமாகின.





## கோவளம் விளையாட்டு கழகத்திற்கு மேலும் நிதியுதவி வழங்கினார் திரு.சுப்பிரமணியம் கதிர்காமநாதன்

கோவளம் விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள கட்டிட திருத்த வேலைகள் மற்றும்புனரமைப்பிற்காக கடந்த பெப்ரவரி மாதம் 11 இலட் சம் ரூபாய்களை வழங்கி கட்டிடம் புனரமைக்கப்பட்டது. மேலும் கடந்த மாதம் டிசம்பரில் மேலும் கோவளம் விளையாட்டுக் கழகத்தில் வன்பந்து கிரிக்கெட் வலைப்பயிற்சி கூடத்தினை அமைப்பதற்காக 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்களும், காரை சலஞ்சேர்ஸ் விளையாட்டு கழகத்திற்கு 3 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய்களையும் வழங்கினார்.



## 2020ம் ஆண்டு காலப்பகுதியில் திரு.சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அவர்களால் பல்வேறு பணிகளிற்காக வழங்கப்பட்ட மேலதிக நிதி அனுசரணைகள் வருமாறு:

யாழ் போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சைக்கூடத்திற்கு தேவையான Video Laryngoscope இரண்டினை பெற்றுக்கொள்ள கடந்த ஏப்ரல் மாதம் 35 இலட்சம் ரூபாய்கள் வழங்கப்பட்டது.



யாழ் தெல்லிப்பளை பிரிவின் மாவிட்டபுரம் பகுதி நல்லிணக்க புரத்தில் வதியும் 200 குடும்பங்களிற்கு கொரோனா கால உலர் உணவு பொதிகள் வழங்க நிதியுதவி செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி செயலர் பிரிவின் கோயில்வயல், மாசார், முல்லையடி, பளை நகரம், இத்தாவில், அரசர்கேணி பிரதேசங்களை சேர்ந்த 1100 குடும்பங்களிற்கு திரு.நாதன் அவர்களின் பல மில்லியன் ரூபா நிதி அனுசரணை யுடனும் நேரடி கண்காணிப்பிலும் பல மில்லியன் ரூபா செலவில் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் இயக்கச்சி, முகமாலை, மாசார், அல்லிப்பளை பிரதேசங்களில் வதியும் 500 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் கடந்த மே மாதம் வழங்கப்பட்டன.



கிளிநொச்சி மாவட்டத்தின் பொன்நகர் பிரதேசத்தில் வதியும் 500 குடும்பங்களிற்கு 3 தடவைகள் உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் கச்சார்வெளி, வேம்படுகேணி, புலோப்பளை, தம்பகாமம் பிரதேசங்களை சேர்ந்த 500 குடும்பங்களிற்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் கிளாலி, தர்மக்கேணி, சோரன்பற்று ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 600 குடும்பங்களிற்கு மொத்தம் 1100 உலர்உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் செல்வாநகர் பிரதேசத்தை சேர்ந்த 582 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் திருவையாறு, வின்சன்ட் வீதி பிரதேசத்தில் உள்ள 173 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, ஜெயபுரம் பிரதேசங்களை சேர்ந்த 400 குடும்பங்களிற்கும், மாவடி வேம்பு பிரதேசத்தை சேர்ந்த 100 குடும்பங்களிற்கும் ஏப்ரல் மாதம் உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் வெலிகண்டல் பிரதேசத்தை சேர்ந்த 150 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த 500 குடும்பங்களிற்கு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இரண்டு தடவைகள் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரத்தினபுரம் பிரதேசத்தினை சேர்ந்த 250 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவேகானந்தாநகர் கிழக்கு, விவேகானந்தாநகர் மேற்கு பிரதேசங்களை சேர்ந்த 354 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கணேசபுரம் கிராமத்தை சேர்ந்த 225 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் குளம் பிரதேசத்தை சேர்ந்த 241 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளம் பிரதேசத்தை சேர்ந்த 300 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் திருநகர் தெற்கு பிரதேசத்தை சேர்ந்த 210 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயந்திநகர் பிரதேசத்தை சேர்ந்த 526 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டதுடன், அப்பிரதேசத்தை சேர்ந்த 58 குழந்தைகளிற்கு பால்மா பைக்கட்டுக்களும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் உதயநகர் கிராமத்தை சேர்ந்த 300 குடும்பங்களுக்கு உலர்உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி பிரதேச செயலர் பிரிவின் மலையாளபுரம் கிராமத்தை சேர்ந்த 504 குடும்பங்களிற்கு இரண்டு தடவைகள் மொத்தம் 1000 உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி செயலர் பிரிவின் சாந்தபுரம் கிராமத்தை சேர்ந்த 400 குடும்பங்களிற்கும், மலையாளபுரம் பிரதேசததை சேர்ந்த மேலும் 70 குடும்பங்களிற்கும் ஏப்ரல் 5ம் திகதி உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பொன்நகர் கிராமத்தை சேர்ந்த 520 குடும்பங்களுக்கு மார்ச் மாதமும் 410 குடும்பங்களுக்கு ஏப்ரல் மாதமும் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. அத்துடன் இப்பிரதேசத்தை சேர்ந்த 108 குழந்தைகளுக்கு பால்மா பொதிகளும் வழங்கப்பட்டன.



கிளிநொச்சி மாவட்டத்தின் கனகபுரம் பிரிவில் உள்ள 200 குடும்பங்களிற்கும், திருநகர் பிரிவில் உள்ள 265 குடும்பங்களிற்கும் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் உருத்திரபுரம் பிரதேசத்தை சேர்ந்த 353 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி பிரதேச செயலர் பிரிவில் கோணாவில் பிரதேசத்தில்

யூனியன்குளம், காந்திகிராமம், ராஜன்குடியிருப்பு பகுதிகளை சேர்ந்த 650 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவடி அம்மன் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 320 குடும்பங்களிற்கும், பெரியபரந்தன் கிராமத்திற்குட்பட்ட 130 குடும்பங்களிற்கும் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஊழியர்களிற்கு கோவிட் தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ள பாதுகாப்பு ஆடைகள் மேலங்கிகள் அடங்கிய(PPE) 100 பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநெச்சி ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் பகுதிகளை சேர்ந்த 420 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி பெரியபரந்தன், கிளிநகரம் கிராமங்களை சேர்ந்த 322 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி தொண்டமாநகர் கிராமத்தை சேர்ந்த 160 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாயவனூர் கிராத்தை சேர்ந்த 520 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தை சேர்ந்த 316 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் மார்ச் மாதம் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி அம்பாள் குளம் கிராமத்தை சேர்ந்த 650 குடும்பங்களிற்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.



கிளிநொச்சி மாவட்டத்தின் கிருஸ்ணபுரம், விநாயகபுரம் பிரிவுகளுக்குட்பட்ட 730 குடும்பங்களிற்கும் முல்லைத்தீவு மாவட்டம் பாலைப்பாணி பிரதேசத்திற்கு உட்பட்ட 60 குடும்பங்களுக்கும் உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேரவில், வள்ளுவர்புரம், யூ.கே.வடக்கு, ஆனந்தபுரம், மந்துவில் பிரதேசங்களை சேர்ந்த 700 குடும்பங்களிற்கு கடந்த ஏப்ரல் மாதம் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரவயல், உடையார்கட்டு பிரதேசங்களை சேர்ந்த 700 குடும்பங்களுக்கு உலர்உணவு பொதிகள் வழங்கப்பட்டன.



முல்லைத்தீவு பிரதேச செயலர் பிரிவின் இந்துபுரம் கிராமத்தை சேர்ந்த 149 குடும்பங்களிற்கு ஏப்ரல் மாதம் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு பிரதேசத்தின் புன்னை நீராவியடி, கண்ணாடிநகர், நாதன் குடியிருப்பு பகுதிகளை சேர்ந்த 170 குடும்பங்களுக்கும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் முத்தையன்கட்டு, ஒலுமடு, புலுமைசிலாந்தி, மணவாளன் பட்டமுறிப்பு பிரதேசங்களை சேர்ந்த 214 குடும்பங்களுக்கும் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்ப்டன.

மலையக மக்களிற்கான உலர் உணவுப்பொருட்களை வழங்க பதுளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ.அரவிந்தகுமார் அவர்களூடாக ஏப்ரல் மாதம் 5 இலட்சம் ரூபாய்கள் வழங்கப்பட்டது.



கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு விபத்து பிரிவு மற்றும் கண் சிகிச்சைபிரிவுக்கான கட்டிடங்களை அமைப்பதற்காக ஐந்து கோடி ரூபாய்களிற்கு மேற்பட்ட நிதியினை வழங்கி 22.05.2020 அன்று கட்டிடங்களிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டதுடன் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர், யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திரு.தசத்தியமூர்த்தி உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

காரை மண் பெற்ற கொடை வள்ளல் 'சுவிஸ் நாதன்' என அழைக்கப்படும் திரு.சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அவர்களின் மனிதாபிமான பணிகள் மற்றும் சேவைகளை எழுத எழுத எழுதிக்கொண்டே இருப்பதிலும் வாசிக்க வாசிக்க வாசித்துக்கொண்டே இருப்பதிலும் கூட உங்களில் பலருக்கு சலிப்பு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் எவ்வித சலிப்போ வேலைப்பழுவோ, மனக்கசப்போ இன்றி கடந்த மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நேரடியாக கலந்து கொண்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பிரதேச செயலர், கிராம அலுவலகர்கள் ஊடாக அப்பிரதேச மக்களின் விபரங்களை பெற்று பல ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த குடும்பங்களிற்கு பல இலட்சம் உலர் உணவுப்பொதிகளை வழங்க ஊரடங்கு வேளைகளிலும் இராணுவும், கடற்படையின் உதவிகளையும் பெற்று மக்களிற்கு தேவையான அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்களை விநியோகித்து வந்துள்ளார்.

இவற்றின் பெறுமதிகள் பல கோடிகள். இவருடைய இந்த மனிதாபிமான பணிகளிற்கு தேவையான உலர் உணவு பொருட்களை தடையின்றி வழங்க அரச நிர்வாகங்கள் முன்வந்து செயற்பட்டு தங்கு தடையின்றி ஊரடங்கு காலங்களிலும் செயற்பட்டுள்ளன.



காரை மண் பெற்றெடுத்த கொடைவள்ளலின் இந்த கொ-ரோனா கால பணியினை படங்களுடனும் முழுமையான விபரங்களுடனும் எடுத்துச்சொல்ல இந்த சஞ்சிகையின் மொத்த பக்கங்களும் போதாத நிலைமை ஏற்படும். ஆனாலும் எங்கள் மண்ணின் நாயகனின் இப்பணிகளில் சிலவற்றையேனும் நாமெல்லாம் அறிந்து கொள்ள எடுத்து வருவதில் பேருவகை கொள்கின்றது 'எனது ஊர் காரை-ரநகர்'.

திரு.நாதன் அவர்களின் மனிதாபிமான மகத்தான பணிகளிற்கு



துணை நின்று செயற்படுத்த அவருடைய இஷ்ட தெய்வமான மணற்காடு முத்துமாரி அம்பாள் தாயின் துணை யும் காரைநகர் ஆண்டிகேணி ஐயனுடன் ஆடவல்லான் நடராஜப்பெருமானின் நித்திய ஆசியும் என்றென்றும் கிடைக்க நாம் அனைவரும் பிரா-ர்த்திப்போமாக.

## காரைநகர் பாடசாலைகளில் கல்வி கற்று 17 மாணவர்கள் இவ்வருடம் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளார்கள்.

காரைநகர் பாடசாலைகளில் க.பொ.த.உயர்தர கல்வி கற்று 2019ம் ஆண்டு நடைபெற்ற பரீட்சைகளின் அடிப்படையில் 17 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். காரை-ரநகர் இந்துக் கல்லூரியில் இருந்து 9 மாணவர்களும் யாழ்ற்ரன் கல்லூரியில் இருந்து 8 மாணவர்களும் தெரிவாகியிருந்தனர்.

**காரைநகர் இந்துக் கல்லூரியில் இருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் விபரம் வருமாறு:**

1. செல்வி சு.சிந்துஜா - கலைப்பிரிவு
2. செல்வி ம.துஸ்யந்தினி - கலைப்பிரிவு
3. செல்வன் கு.வசந்தரூபன் - உயிரியல் பிரிவு
4. செல்வி பா.குலமதி - உயிரியல் பிரிவு
5. செல்வன் க.கமலரூபன் - பொறியியல் பிரிவு
6. செல்வன் P.அலெக்ஸ் - கலைப்பிரிவு
7. செல்வி ப.சிந்துஜா - உயிரியல் பிரிவு
8. செல்வன் கோ.மிரோஜன் - பொறியியல் பிரிவு
9. செல்வி தே.கம்சிகா - பௌதீக விஞ்ஞானம்

**யாழ்ற்ரன் கல்லூரியில் இருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு:**

1. செல்வன் லோகேஸ்வரன் குருபரன் - Applied Sciences
2. செல்வன் செந்தில்நாதன் பிரசாந்தன் - Industrial information Technology
3. செல்வன் மகேஸ்வரன் கலைச்செல்வன் - கலை பிரிவு
4. செல்வி பரமெஸ்வரன் யாழினி - கலை பிரிவு
5. செல்வி நவரத்தினம் சுதர்சினி - கலை பிரிவு
6. செல்வன் சிவகுமாரன் நவநீதன் - Computer Science & Technology
7. செல்வன் சிவகுமார் செந்தூரன் - Physical Science ICT
8. செல்வி பரமேஸ்வரன் துவாரகா - கலை பிரிவு



**மிஸிஸ் முருகேசு:** அடப்பாவி... மனுஷா வீட்டை ஒவ்பீஸ் மாதிரி பாவியெண்டு நான் சொன்னதுக்க இப்படியா செய்யிறது....

**சோம்பல் முருகேசு:** ? ? ? ? ? .....

www.karainews.com
**' எனது ஊர் காரைநகர் '**
தொகுப்பாளர்



**தீசன் திரவியநாதன்**
**331 Trudelle Stree, Unit 34**
**Toronto, Ont. M1J 3J9 Canada**
**Email: theesan@karainews.com**
**TEL: 416 821 8390**

# புட்டு

இணுவையூர் நித்தியதாஸ்

பீசாவில் என்ன சுவை கண்டீர்
காசில்லாதவனும் புசிக்கும் புட்டின் முன்னே
பேசும் பொருளானதின்று பேஸ்புக்கில்
நாசாவும் நாளை இறங்கிடும் ஆராய்ச்சியில்
உரலில் இடித்த சம்பலை  தாழித்து பின்
குழலில் அவித்த புட்டோடு புசிக்கலாம்
இரவில் மிச்சம் ஏதும் இருந்தால்
பகலில் பழங்கறியோடு உண்ணலாம்
மதியம் சமைத்த ஆட்டிறைச்சி
அதையும் இரவில் சூடாக்கி
சதையும் எலும்பும் மிச்சம் விடாமல்
இதிலும் இறுதியில் புட்டே வெல்லும்
நண்டுக்கறியோடு புட்டு உண்டால்
ஒன்றிரண்டு தட்டு இறங்கும்
கணவாய் கறியோடு உண்டால்
ஒருவாயும் மிச்சம் இராது
அவித்த வெள்ளை மாப்புட்டோடு
வதக்கலில் உருளைக்கிழங்கு போதும்
பிரட்டலில் கத்தரிக்காய் போதும்
பொரித்தலில் மோர்மிளகாய் சுண்டங்காய்
நாலு வகை கறி எதுக்கு
நன்று பழுத்த வாழைப்பழம் போதும்
நான்கு துண்டு மாம்பழமும் போதும்
நாவில் எச்சிலூறும் பலாச்சுளை போதும்
வேறு என்ன சொல்வேன்
யார் வந்து கேட்டாலும்
புட்டு புட்டு உன் திருவாயால்
கட்டு கட்டு ஒரு கட்டு கட்டு
ஏதோ என்னுடைய பங்குக்கு என்னால முடிஞ்சது



## காரைநகர் Premier League - 2020 மென்பந்து கிரிக்கெட் தொடர்

கலாநிதி விளையாட்டுக்கழகம் தீபாவளியை முன்னிட்டு கடந்த ஒக்டோபர் மாதம் நடாத்திய மென்பந்து கிரிக்கட் சுற்றுதொடரில் Valanthalai Warriors முதலிடம் பெற்று வெற்றிக்கேடயத்தை தனதாக்கிக்கொண்டது. இரண்டாவது இடத்தினை களபூமி Knight Riders அணியும் மூன்றாவது இடத்தினை இலகடி Eagale அணியும் பெற்றுக்கொண்டது.

இந்த போட்டிகளில் காரைநககரில் உள்ள பின்வரும் அணிகள் பங்கேற்றன.

1. (இடைப்பிட்டி) Idaipiddy Super Strikers
2. Kovalam Capitals
3. Karai Central XI Boys
4. Kalapoomi Knight Riders
5. (வலந்தலை) Valanthalai Warriors
6. (இலகடி) Ilakady Eagles

**முதலாம் இடத்தை பெற்றுக்கொண்ட** Valanthalai Warriors




**இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்ட** Kalapoomi Knight Riders




தொடர்ச்சி அடுத்த பக்கம்.... →


## மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்ட Ilakady Eagles







நடைபெற்ற தொடரின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார் ஐங்கரன்




நடைபெற்ற தொடரின் இறுதிப் போட்டியில் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார் ஜீவன்

### பங்குபற்றிய அணிகளின் தலைவர்கள்




## சிரமதான பணியில் கலாநிதி விளையாட்டுக்கழகம்

கலாநிதி விளையாட்டு கழக இளைஞர்கள் டிசம்பர் 12 மற்றும் 13ம் திகதிகளில் சிரமதான பணிகளில் ஈடுபட்டனர். 12ம் திகதி காரைநகர் இந்துக் கல்லூரி வளாகத்தை துப்பரவு செய்வதிலும் 13ம் திகதி காரைநகர் அபிவிருத்தி சபை 'அறிவாலயம்' மாணவர் நூலக வளாகத்தினை துப்பரவு செய்வதிலும் ஈடுபட்டனர். கலாநிதி விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் இது போன்ற சிரமதான பணிகளில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.
























## உலகளந்த அறிவுச் சூரியன்



ஊற்றுக்கண் திறந்து
ஊர் வாய்க்கு நீர்வார்த்தவன்
உறங்கினான் என்கிற செய்தி
இறங்கியது தலையில் இடியாய்
நான் மனதார நேசித்த உறவு
ஜோன் மனோகரன் கெனடி
யான் பெற்ற பேறு
நேற்றிருந்த நெடுமலை
ஆற்றலனாய் அவதரித்த
உலகளந்த அறிவுச்சூரியன்
தேற்ற முடியாமல் காற்றும்
தேம்பியழுகிறதே
கூற்றே ஏன் குடித்தாயெம்
கொள்கை வீரனை?
காரை மண்ணின் காவலனாய்
வேரை மறவாத பற்றாளனாய்
யாரைப் போலுமன்றி
அனைவருக்கும் கைகொடுத்து
ஆறுதலாய் உவக்கும்
அருந்தொண்டனாய்
பேர் பதித்துச் சென்ற பேராளனே
தீராத் துயரையா இது எமக்கு
வராமல் வந்த சா
ஜோன் மனோகரா அண்ணலே
மீண்டும் எம் ஊருக்கே வா வா!

வே.செல்வராசா
பண்டித்தாழ்வு, காரைநகர்

கலாநிதி ஜோன் மனோகரன் கென்னடி 16.12.1967ம் ஆண்டு அவதரித்து தனது 25 வயதில் 1992இல் ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப்பட்டம் பெற்று கிழக்கு இலங்கை பல்கலைக்கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராக கடமையாற்றினார்.

2009ம் ஆண்டு மீண்டும் ஆங்கில இலக்கியத்தில் கொண்ட ஆர்வத்தினால் இந்தியா தமிழ்நாட்டில் திருநெல்வேலியில் உள்ள மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் முனைவருக்கான ஆய்வினை மேற்கொண்டு கலாநிதி பட்டம் பெற்றார்.

அத்துடன் கல்வியில் மட்டுமன்றி அரசியலிலும் தமிழர் நலனில் அக்கறையுடன் செயற்பட்டு அதிலும் தனித்துவமாக தனக்கென ஒரு இடம் கொண்டு தலைமையுடன் சேர்ந்து நின்றார். 2010ம் ஆண்டு தமிழர் போராட்டம் தணிந்த வேளையில் சர்வதேச கல்விப்பணியினரின் ஏற்பாட்டில் ஆப்பிரிக்க நாடான எதியோப்பியாவில் மக்கலே பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கிய விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

ஏழு ஆண்டுகள் எதியோப்பியாவில் பணியாற்றிய ஜோன் மனோகரன் கென்னடி திடீர் சுகஜீனம் காரணமாக 10.01.2018

## வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை(சடையாளி) மேற்கு பகுதிக்கான மதில் அமைக்கப்படுகின்றது



திரு.நா.இந்திரன்
வர்த்தகர், இலண்டன்

மேற்படி பாடசாலையின் கற்றல் மற்றும் அபிவிருத்தி பணிகளில் திரு.நா.இந்திரன் அவர்கள் காட்டி வரும் ஆர்வம் அளப்பரியது. சக்தி இலவசக்கல்வி திட்டத்தின் ஊடாக பல்வேறு கல்வி பணிகளை ஆற்றிவரும் திரு.நா.இந்திரன் சடையாளி பள்ளிக்கூடத்தின் மேற்கு பகுதிக்கான மதில் சுவரினை அமைப்பதற்கான அனுசரணையினை வளங்கி வருகின்றார். டிசம்பர் மாத ஆரம்பத்தில் தொடங்கப்பட்ட இந்த 200 அடி நீளமான பகுதிக்கு மதில் அமைக்கும் பணி நிறைவடையும் நிலைக்கு வந்துள்ளது. இந்த கட்டிட பணிகளை திரு.ஆ.அருள்ராசா அணியினர் மேற்கொண்டு வருகின்றனர். இந்த சுவர் மீது மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுடன் கூடிய அழகிய வர்ண சித்திரங்கள் தீட்டப்படவுள்ளதாகவும் இன்னும் சில நாட்களில் இப்பணி நிறைவடையும் எனவும் சக்தி இலவசக்கல்வி நிலையத்தின் ஊடாக அறியப்படுத்துகின்றது.





### சக்தி இலவசக்கல்வி நிலையத்தின் ஊடாக சாம்பலோடையில் அமைந்துள்ள காரைநகர் வடக்கு அந்திகை கிரியை மண்டபம் புனரமைப்பு

கடந்த நவம்பர் மாதம் மேற்படி பணிகள் ஆரம்பிக்கப்பட்டு குளிக்கும் அறை, மலசல கூடம் அமைக்கப்பட்டு அதற்கான நீர் வசதிகள் செய்து கொடுத்துள்ளது சக்தி இலவசக்கல்வி நிலையம்.

### கலாநிதி விளையாட்டு கழகத்திற்கான நிதி உதவி

கலாநிதி விளையாட்டுக் கழகத்திற்கான புதிய கட்டிடத்திற்கு மின் இணைப்பு வேலைகள் சக்தி இலவசக் கல்வி மேம்பாட்டுக் கழத்தினால் செய்து கொடுக்கப்பட்டன அத்துடன் கடந்த ஒக்டோபரில் கலாநிதி விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளிற்கான அனுசரணையினையும் சக்தி மேம்பாட்டுக்கழகம் வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

சக்தி இலவசக் கல்வி நிலையத்தின் ஆரம்ப கர்த்தாவும் அதன் பிரதான நிதி அனுசரணையாளருமான திரு.நா.இந்திரன் அவர்கள் பல கோடி ரூபாய்கள் செலவில் கற்றல், கற்பித்தல் மற்றும் அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டு வருவதும், காரைநகரில் மட்டுமன்றி யாழ் நகரின் பல பகுதிகளிலும் பல்வேறு கல்வி சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை ஆற்றி வருவதும் காரை மண்ணிற்கும் மக்களிற்கும் பெருமை சேர்க்கும் விடமாக போற்றப்படுகின்றது.

## திருவிழாவிற்கு சென்ற இளைஞர்களால் பாடசாலைக்கு கணணி அன்பளிப்பு

கடந்த வருட ஈழத்து சிதம்பர திருவெம்பாவை திருவிழா காண சென்ற வெளிநாடுகளில் வதியும் சில இளைஞர் களால் வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாசாலையின் அலுவலக தேவைக்கான கணணி ஒன்றினை வழங்கியுள் ளனர். வருடந்தோறும் ஈழத்து சிதம்பரத்தில் திருவெம்பா வை திருவிழாவை காண செல்லும் பக்தர்களில் 'எனது ஊர் காரைநகர்' தொகுப்பாளர் திரு.தீரன் திரவியநாதனும் ஒரு-வர். ஊரிற்கான பயணத்தின் போது காரைநகர் பாட-சாலைகளின் நிலமைகளை அறிந்து கொள்வதற்காக அனைத்து பாடசாலைகளிற்கும் நட்பு ரீதியாக சென்று நிலமைகளை அறிந்து வருவதை வழக்கமாக கொண்டுள்ளவ ர். அந்த வகையில் பின்தங்கிய பிரதே-தசமும், வாழ்வாதர நிலையில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களையும் கொண்டிருக்கும் வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாசாலை க்கு சென்றபோது, பாட-சாலையின் பௌதீக வளம் மேம்பட்டிருப்பதுடன், பாட-சாலைக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதி-கரித்திருப்பதுடன் மாணவர்கள் ஒழுக்க சீலர்களாக கல்வி கற்பதில் நாட்டம் கொண்டுள்ளதையும் தெரிந்து கொள்ள முடிந்தது.

அதற்காக முழுமையாக தமது அர்பணிப்புடனான சேவை யினை இப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் திரு.குலசேகரம் தலைமையிலான ஆசிரியர் குழாம் செவ்வனே நிறைவேற்றி வருகின்றமை காணத்தக்கது. இந்த நிலையில் கனடா காரை கலாசார மன்றத்தினரால் 2015ம் ஆண்டு வழங்கப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட மடிக்கணணி ஒன்றின் ஊடாக நிர்வாக பணிகளை மேற்கொண்டு வந்த நிலையில் அதன் தரமும் வேகமும் தற்போதைய நிலையில் பாவனைக்கு உகந்தது அல்ல என்கின்ற நிலமையிலும் கல்விக் கோட்டத்தினால் அந்த கணணியை மேற்கோள்காட்டி வேறொரு கணணியினை அப்பாடசாலைக்கு வழங்குவதில் சிரமம் ஏற்பட்டிருப்பது அறிந்து கொள்ளப்பட்டது.

தலைமை ஆசிரியர் திரு.குலசேகரம் அவர்கள் கல்விக் கோட்டத்தின் ஊடாக பாடசாலைக்கு தேவையான கற்றல் கற்பித்தல் உபகரணங்களை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரத்தை எடுத்து வருவதுடன் கல்விக்கோட்டத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள எடுத்த முயற்சிகளிற்கான ஆவணங்களை யும் கல்விக்கோட்டத்தினால் நிராகரிக்கப்பட்ட ஆவணங்க ளையும் தெரியப்படுத்தினார். அதனடிப்படையில் மேற்படி பாடசாலையின் நிர்வாக செயற்பாடுகளிற்கான கணணியை பெற்று வழங்க உறுதியளிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஈழத்து சிதம்பரத்தின் 2019ம் ஆண்டுக்கான திருவெம்பாவை உற்சவத்தின் போது 7ம் நாள் திருவிழாவின் போது வெளிநாடுகளில் இருந்து வருகை தந்திருந்த இளைஞர்களை கோயில் சுற்றுப்புற த்தில் சந்தித்தவேளை மேற்படி விபரம் தீசன் திரவியநாதன் அவர்களால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. உடனடியாக அங்கு கூடியிருந்த இளைஞர்கள் அதற்கான உதவிகளை வழங்க முன்வந்தனர். 85,000 ரூபா பெறுமதியிலான கணணி வேண்டப்பட்டு 10.01.2020 அன்று அமரர் ஜோன் மனோகரன் கென்னடி அவர்களின் 2ம் ஆண்டு நினைவு தினத்தின் போது வேரப்பிட்டி பாடசாலை அதிபர் திரு.குலசேகரம் அவர்கள் வரவழைக்க ப்பட்டு காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் திரு.அரியரட்ணம் ஜெக தீஸ்வரன் அவர்களி னால் வழங்கப்பட்டது.



இந்த பணிக்கான நிதி யினை உடனடியாக வழங்க முன்வந்த வெளிநாடு வாழ் அன்பர்கள் விபரம் வருமாறு:

1. விஜயரத்தினம் அருள்முகன் சாயிபாபா(ஜேர்மனி)
2. அருளானந்தம் செல்வராஜா(இந்திரன்)(ஜேர்மனி)
3. ரவீந்திரன் சங்கரப்பிள்ளை(ஜேர்மனி)
4. சர்வா குலரத்தினம்(இலண்டன்)
5. மகாதேவன் பாலசுப்பிரமணியம்(கனடா)
6. தீசன் திரவியநாதன்(கனடா)
7. கிருபா செல்வநாயகம்(இலண்டன்)
8. சண்முகநாதன் பரமநாதர்(சுவிஸ்)
9. சண்முகலிங்கம் நடராசா(ஜேர்மனி)

வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாசாலை அதிபருடனான பாடசாலை சந்திப்பின் போது அதிபர் தெரிவித்த விடயங்களில் கண்டுகொள்ளத்தக்க விடயங்களில் கனடா காரை கலாசார மன்றத்தினரால் 2015ம் ஆண்டு வழங்கப்பட்ட பாடசாலைக-ளிற்கான நிரந்தர வைப்பு நிதியி ல் இருந்து வருடந்தோறும் பெறப்படும் ஒரு இலட்சம் ரூபாய்கள் வரையான வட்டி பணத்தின் ஊடாக பாடசாலை யின் பல தரப்பட்ட அத்தியாவசிய தேவைகள் நிறைவேற்றப்படுவ தாகவும், கற்றல் தேவைகளிற் கான பாடப்பயிற்சிகள் மற்றும் விளக்க நெறிகள் பிரதி செய்ய தேவைப்படும் சில நூறு ரூபாய்கள் தினமும் பயன்படுத்தப்படுவதாகவும், அன்றைய தினமும் 280 ரூபாய்களிற்கு பிரதி செய்ய தேவையான நிதி மேற்படி வட்டி பணத்தின் ஊடாக வழங் கப்பட்டதற்கான ரசீதினையும் தெரியப்படுத்தியிருந்தார்.



அத்துடன் கனடா காரை கலாசார மன்றத்தின் நிரந்தர வைப்பில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டிப்பணத்தின் ஊடாக நிறைவேற்றப்படும் பாடசாலைக்கான அத்தியாவசிய செயற்பாடுகளின் விபரங்களையும் அறியப்படுத்தியிருந்தார். இவ்வாறு கனடா காரை கலாசார மன்றத்தினால் வழங்கப்பட்ட நிரந்தர வைப்பில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டிப்பணத்தின் ஊடாக மாணவர்கள் உடனடி பயன் பெறும் வகையில் அந்த நிதியினை பயன்படுத்தும் பாட-சாலைகளில் ஸ்ரீகணேசா வித்தியாசாலை பாராட்டுதலுக்குரியது.

இந்த நிலையில் மற்றுமொரு பின்தங்கிய நிலையில் உள்ள பகுதியை சேர்ந்த பாடசாலைக்கு சென்ற வேளை அதிபர் அவர்கள் பாடசாலையின் நிர்வாகம் சம்பந்தமில்லாத தனது சொந்த தேவைகளிற்கான உதவியை முன்வைத்திருந்த மையும், தனது பிள்ளைகள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளார்கள் எனவும் அவர்களிற்கு தேவையான கணணியினை பெற்று தருமாறும் கேட்டுக்கொண்டார்.

அது மட்டுமன்றி பாடசாலை பிள்ளைகளின் கல்வி நிலமை யினை கேட்ட போது 'இதுகள்' படிக்க வருவதில்லை. 'இதுகளிற்கு படிப்பு ஏறாது' என்ற வார்த்தைகளை பயன்படுத் தியிருந்தார். அது மட்டுமன்றி கனடா காரை கலாசார மன்றத்தின் நிரந்தர வைப்பில் இருந்து பெறப்படும் வட்டிப்பணத்தின் ஊடாக குறிப்பிடப்பட்ட கற்றல் கற்பித்தல் தேவைகளிற்காக அன்றி பலதரப்பட்ட தேவைகளிற்கும் அதற்குரிய நிதியினை பயன்படுத்தி வருவதும் கண்டறியப்ப ட்ட நிலையில் அது பற்றி வினவியபோது, அந்த நிரந்தர வைப்பில் இருந்து பெறப்படும் நிதியானது கனடா காரை கலாசார மன்றத்தினரால் வழங்கப்பட்ட போது குறிப்பிடப்ப ட்ட கற்றல் கற்பித்தல் மற்றும் சுகாதார தேவைகளிற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதையும் அறியாத நிலையில் 'தந்தால் தரட்டும், இல்லாவிட்டால் எங்களிற்கு எப்படி பாடசாலையை நடாத்த வேண்டுமோ அப்படி நடாத்த தெரியும்' எனவும் தெரிவித்தார். இதுபோன்ற பாடசாலை தலைமை ஆசிரியர் களினால் தான் இன்னும் காரைநகரில் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் பிள்ளைகள் கல்வியில் நாட்டமில்லாது இருந்து வருகின்றார்கள் என்பது வெளிப்படை.

கடந்த காலங்களில் ஊரி அ.மி.த.க.பாடசாலை காரைநகரில் பின்தங்கிய நிலையில் இருந்து இன்று ஆரம்ப பாடசாலை களில் மிகவும் முன்னேறிய பாடசாலையாகவும் இப்பகுதி மக்களிடையே தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப ஆர்வமுடன் செயற்பட்டு வருவதையும் அறிய முடிகின்றது. அத்துடன் வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையும் அண்மைக்காலமாக அதிபர் திரு.குலசேகரம் அவர்களின் முயற்சியினால் பாடசாலைக்கான வீதி செப்பனிடுவதற்காக வும் பிரதேச சபை மூலம் முயற்சிகளை மேற்கொண்டு இப்பகுதி மக்களின் நலன்களையும் கருத்தில் கொண்டு செயற்பட்டு வருவதால் இப்பகுதி மக்களும் பலத்த ஆதரவு கொடுத்து வருகின்றார்கள். இவ்வாறு காரைநகர் அல்லாத வேறு இடங்களில் இருந்து வருகை தரும் காரைநகர் பாட-சாலைகளிற்கான அதிபர்கள் பணிக்காக அன்றி சேவை நோக்குடன் தமது ஆசிரிய பணியினை மேற்கொண்டு வருவதால் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சி பின்தங்கிய பிரதேசங்களிலும் பெருவாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது காணக்கூடியதாக உள்ளது.

### கனடா காரை கலாசார மன்றத்தினால் காரைநகர் ஆரம்ப பாடசாலைகளிற்கு வழங்கப்பட்ட ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாவின் மூலம் கிடைக்கப்பெறும் வட்டி பணத்தின் ஊடாக நடைபெறும் செலவீனங்கள் பரிசீலிக்கப்பட வேண்டும்

2015ம் ஆண்டு கனடா காரை கலாசார மன்றத்தினால் காரைநகரில் இயங்கி வந்த 12 ஆரம்ப பாடசாலைகளிற்கும் தலா 10 இலட்சம் வீதம் ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்கள் நிரந்தர வைப்பில் இட்டு வழங்கப்பட்டது. இந்த நிரந்தர வைப்பு பணம் ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்களில் இருந்து கிடைக்கப்பெறும் வங்கி வட்டி பணத்தில் இருந்து பாடசாலைகள் செலவிடும் செலவு விபரங்கள் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

நேரடியாக கற்றல் கற்பித்தல் மற்றும் அத்தியாவசிய சுகாதார தேவைகளிற்காக மட்டும் என வழங்கப்பட்ட மேற்படி நிரந்தர வைப்பு நிதியில் இருந்து பெருமளவு நிதியினை பல பாடசாலை கள் பரிசளிப்பு, விளையாட்டு மற்றும் கட்டிட தேவைகளிற்கே பயன்படுத்தி வருவது கடந்த கால பாடசாலைகளின் கணக்கறிக்கைகளில் இருந்து அறிய வருகின்றது.

ஒவ்வொரு ஆரம்ப பாடசாலைகளும் வருடந்தோறும் ஒரு இலட்சம் ரூபாய்களிற்கு மேலாக வருட வட்டியாக பெற்று வருகின்றன. மேலதிக உதவி ஆசிரியர் மற்றும் கற்றல் தேவைகளிற்காக பிரதியெடுத்தல், மேலதிக வகுப்புக்களிற்கான செலவீனங்கள், மேலதிக மின்சார கண்டணம், மேலதிக துப்பரவு கட்டணம் என்பவற்றை காரணம் காட்டியே ஆரம்ப பாடசாலை அதிபர்கள் இந்த நிதியினை பெற்றுக்கொண்டார்கள்.

பல ஆரம்ப பாடசாலை அதிபர்கள் மேலதிக வகுப்புக்களிற் கான ஆசிரியர்களிற்கு குறைந்தளவு மாதாந்த நிதியான 3,000 ரூபாய்கள் வழங்க முடியாத நிலையில் இருப்பதா கவும், கற்பித்தல் தேவைகளிற்காகவும் தினமும் போட்டோ பிரதி எடுக்க அதிபர், ஆசிரியர்களே தினமும் நூறு, இருநூ று ரூபாய்களை செலவிட்டு வருவதாகவும், கல்வித் திணைக்களம் செலுத்தும் மின்சார கட்டணங்களிற்கு மேலாக மாதந்தோறும் மேலதிகமாக மின்சார கட்டணம் வருவதாகவும் குடிதண்ணீருக்கான நிதி, சுத்திகரிப்பிற்கான நிதி கல்வித் திணைக்களம் வழங்கும் நிதி போதாமை பற்றியும் கண்ணீர் மல்க தெரிவித்தனர்.

ஆனால் கடந்த சில வருடங்களாக காரைநகர் ஆரம்ப பாட-சாலை கள் மேற்படி வட்டி பணத்தின் ஊடாக தமது செலவு விபரங்களை கனடா காரை கலாசார மன்றத்திற்கு தெரிவித்துள்ள போதிலும் அதன் விபரங்களை கனடா காரை கலாசார மன்றம் அதன் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள நிலமையிலும் அந்த கணக்கு விபரங்களை பரிசீலித்துக்கொள்வதில் கனடா காரை கலாசார மன்றமோ காரைநகர் அபிவிருத்தி சபையினரோ துளியேனும் அக்கறை கொள்ளவில்லை என்பது தெரிகின்றது.

பரிசளிப்பு நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் இன்னோரென்ன நிகழ்வுகளிற்காகவும் கட்டிட வேலை களிற்குமாகவே வட்டிப்பணத்தின் பெருமளவு நிதி செலவிட ப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாக தெரிவதுடன், ஒரு சில பாடசாலைகளைத் தவிர எந்த பாடசாலைகளிலும் மேலதிக வகுப்புக்கள்(2020 ஆண்டு தவிர்த்து) நடைபெறவில்லை யென்பதும், மேலதிக உதவி ஆசிரிய ர்கள் இணைத்துள்கொள்ளப்படவில்லை என்பதும் தெரிகின்றது.

2015ம் ஆண்டு கனடா காரை கலாசார மன்றம் காரைநகர்

ஆரம்ப பாடசாலைகளிற்கென கனடா காரை மக்களிடம் சேர்த்துக்கொண்ட பணத்தினை பாடசாலைகளின் பெயரில் நேரடியாக வைப்பில் இட்டு வழங்கப்படும் என தெரிவித்திரு ந்த போதிலும் இறுதியில் 2015.05.05 அன்று காரைநகர் அபிவிருத்தி சபையினரையும் இணைத்து ஆரம்ப பாட-சாலைகளின் அதிபர்கள் அவர்களின் சம்மதத்துடன் பாட-சாலை நிர்வாகங்களிற்கு வெளியே நிர்வகிக்க கூடிய வகையில் தான் இந்த 10 இலட்சம் ரூபாய்களிற்கான 12 நிரந்தர வைப்புக்களையும் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் கனடாவில் அப்போதைய கனடா காரை கலாசார மன்ற நிர்வாகிகள் பாடசாலைகளிற்கென சேர்த்துக் கொண்ட நிதியினை காரைநகர் அபிவிருத்தி சபை யின் பெயரில் வைப்பு செய்து ஏமாற்றி விட்டதாகவும் அதற்கான பிரச்சாரங்களில் ஈடுபட்டதுடன் பலவித வதந்திக ளை பரப்பி பல்வேறு முறைப்பாடுகளில் ஈடுபட்டதுடன், அப்போதைய கனடா காரை கலாசார மன்றத்தின் தலைவர் திரு.பரமானந்தராசா, செயலாளர் திரு.தீசன் திரவியநாதன் மீதான சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். அதன் பின்னணி இன்றுவரை தொடர்ந்து வருகின்றதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் 2020 ஆரம்பத்தில் நிரந்தர வைப்பை பெற்றுக்கொண்ட ஆரம்ப பாடசாலைகளில் ஒன்றான பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை கல்விக் கோட்டத்தினால் மாணவர் வருகை குறைவு காரணமாக சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலையுடன் இணைக்கப்ப ட்டது. அதுவரை மேற்படி நிரந்தர வைப்பில் இருந்து பெறப்பட்ட ஒரு இலட்சத்திற்கு மேலான வட்டி பணம் பாட-சாலையின் அபிவிருத்தி சங்க கணக்கில் இருந்துள்ளது. அதனை பாடசாலை மூடப்பட்டு ஒரு வருடமான போதிலும் மீள பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் நிரந்தர வைப்பில் இடப்பட்டிருந்த 10 இலட்சம் ரூபாய்கள் பத்திரமாக காரைநகர் அபிவிருத்தி சபையின் பெயரில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

2014ம் ஆண்டு பெரிய சிவன் ஆலயத்தில் நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தின் போது கனடாவில் காரைநகர் மக்களிடம் இருந்து சேர்க்கப்பட்ட ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்க ள் பாடசாலைகளின் பெயரில் தனித்தனியாக வைப்பில் இடப்படும் என அப்போதைய நிர்வாக சபையினரால் தெரிவிக்கப்பட்ட போதிலும் 2014 டிசம்பரில் காரைநகர் பாடசாலைகள் அதிபர்கள், கல்வியாளர்கள் சந்திப்பின் போது நிரந்தர வைப்புக்கள் தனித்தனியாக பாடசாலைகளின் பெயரில் வைப்பில் இடுவதானது இலங்கை அரசிற்கு நிதி வழங்குவதற்கு ஒப்பானதாக அமையலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அதன் காரணமாகவே 2015.05.05 அன்று நிரந்தர வைப்புக்கள் யாவும் பாடசாலைகள் நிர்வாகங்களிற்கு வெளியே நிர்வகிக்கும் வகையில் வைப்பிலிடப்பட்டன.

இந்த நிலையில் பாடசாலைகளின் செயற்பாடு, மற்றும் பாட-சாலைகளினால் மேற்படி நிரந்தர வைப்பில் இருந்து பெறப்படும் வட்டிப்பணத்தின் ஊடாக உரிய வகையில் செயற்பட முடியாது போனால் காரைநகர் அபிவிருத்தி சபை யினரும் கனடா காரை கலாசார மன்றத்தினரும் இணைந்து இந்த நிதி தொடர்பான முடிவுகளை எப்பொழு தும் மேற்கொள்ள முடியும் என்பது தற்போது மூடப்பட்டுள்ள பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை விடயத்தில் தெளிவாகியுள்ளது.

பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை கடந்த ஜனவரியில் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலையுடன் இணைக்கப்பட்டதன் பின்னர் காறைரகர் அபிவிருத்தி சபை யினர் மேற்படி பாடசாலையின் அபிவிருத்தி சங்க கணக்கிற்கு நேரடியாக வைப்பில் இடப்பட்டு வந்த வங்கி வட்டி பணத்தினை காரைநகர் அபிவிருத்தி சங்க கணக்கி ற்கு மாற்றியுள்ளனர். இந்த நிலையில் கனடா காரை கலா சார மன்றத்தின் தற்போதைய நிர்வாகம் நடவடிக்கை எடுத்து மேற்படி வைப்பில் இருந்து பெறப்படும் வட்டிப்பணத் தினை உரிய முறையில் செயற்படுத்தவும், காறைகர் ஆரம்ப பாடசாலைகளினால் கடந்த காலங்களில் பெறப்பட்ட வட்டி பணத்தின் ஊடாக செலவிடப்பட்ட செலவீனங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

தற்போதைய கொரோனா பேரிடர் காலத்தில் நிர்வாகம் மற்றும் நிதி சேகரிப்பு மற்றும் மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பாக நடிவடிக்கைகள் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டாலும் திட்டமிடல் மற்றும் கிடைக்கப்பெறும் வட்டி பணத்தின் மூலம் செயற்படுத்தப்பட வேண்டிய தேவைகள் பற்றிய விழிப்புணர்வு காரைநகர் மன்றங்களில் உள்ள நிர்வாக உறுப்பினர்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது கட்டாயமாகும்.

2020ம் ஆண்டு கொரோனா பேரிடர் காலத்தில் வெளிநாடு களில் வதியும் தனிப்பட்ட நபர்கள் ஊடாக பல்வேறுபட்ட சேவைகள், பணிகள் காரைநகரில் செயற்படுத்தப்பட்ட போதிலும் கொரோனா பேரிடரினை காரணம் காட்டி வெளி நாடுகளில் உள்ள காரைநகர் அமைப்புக்கள் இன்றுவரை எவ்வித செயற்பாடுகளிலும் அக்கறை இன்றி இருப்பது கவலைக்குரியது. கொரோனா பேரிடர் காலத்திலும் கனடா காரை கலாசார மன்றத்தின் ஊடாக வழங்கப்பட்ட பாட-சாலைகளிற்கான நிரந்தரவைப்பு நிதியின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட திட்டத்தின் காரணமாக அப்போதைய தலைவர் திரு.தம்பிஜயா பரமானந்தராசா மற்றும் அப்போதைய செயலாளர் திரு.தீசன் திரவியநாதன் ஆகியோரிற்கெதிரான சட்ட நடவடிக்கைகளை திரு.முத்து பொன்னம்பலம் ஊடாக மேலும் சிலர் இணைந்து இன்னமும் முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த 5 ஆண்டுகளில் மேற்படி ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்கள் நிரந்தர வைப்பில் இருந்து காரைநகர் ஆரம்ப பாடசாலைகள் மேற்படி நிரந்தர வைப்பில் இருந்து 60 இலட்சம் ரூபாய்களிற்கு மேலாக வட்டியாக பெறப்பட்டு ள்ள நிலைமை யிலும் தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற நிலைமையில் இருந்து சற்றும் மாறாமல் 2015ம் ஆண்டு காரைநகர் பாடசாலைகளிற்காக ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்கள் வைப்பில் இட்டது தவறு தான் என்பதை இன்னமும் நிரூபிக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்க ள். காலம் பதில் சொல்கின்றது. ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்கள் இன்னமும் பத்திரமாக அதன் பணியினை

## வாரிவளவு நல்லியக்கச் சபை
## பொன்விழா 1970 - 2020



1970ம் ஆண்டு சித்திரை மாதம் 11 ம் திகதி வாரிவளவு நல்லியக்கச்சபை உதயமாகியது. 1990 வரை சித்திரை வருடப்பிறப்பு காலங்களில் வாரிவளவு நல்லியக்கச்சபை நிகழ்வுகள் கொடிகட்டி பறந்த காலம். வலந்தலை துறைமுகம் பகுதியில் இருந்து மக்கள் பேரூந்துக்களில் வாரிவளவுக்கு வந்து சேர்வர். களபூமி மக்கள் கேசடை வயல் வழி பாதை வழி வாரிவளவுக்கு வந்து சேர்வர். இக்கால பகுதியை மக்கள் வாரிவளவு கொண்டாட்டத்திற்காக ஒதுக்கிக் கொள்வர். முழுக் கிராமமும் வாரிவளவில் சங்கமிக்கும்.

மாதம் தோறும் பண்ணிசை போட்டிகள், திருக்குறட்போட்டிகள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, போன்ற நீதி நூற் பாடற்போட்டிகள் நடைபெறும். 5ம் ஆண்டு புலமைப்பரிசில் முன்னோடி பரீட்சைகள், க.பொ.த.சாதாரண தர கணித , விஞ்ஞான முன்னோடி பரீட்சைகள் என்பன நடைபெறும்.

சித்திரை வருடப்பிறப்பு சிறப்பு நிகழ்வாக உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், நீச்சல் போட்டி என்பன நடைபெறும். வாரிவளவு பிள்ளையார் கோவில் தெற்கு வீதியில் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறும். வாரிவளவு பிள்ளையார் கோவில் வீதியில் தென் கிழக்கில் அமைந்துள்ள ஆலமரத்தின் கீழ் உள்ள அரங்கில் பேச்சு, பாட்டு, கலைநிகழ்வுகள் நடைபெறும். போட்டிகள் யாவும் விறுவிறுப்பும் கலகலப்பும் நிறைந்தவை.



ஆக்கம்: S.K.சதாசிவம்

வருடம் முழுவதும் நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசளிப்பும் பாராட்டும் கலை நிகழ்வுகளுடன் புதுவருடத்திற்கு அண்மிய தினங்களில் நடைபெறும். விளையாட்டு போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்கள், பரீடசைகளில் வெற்றி பெற்றவர்கள், க.பொ.த சாதாரண தரத்தில் சிறப்பு பேறு பெற்றவர்கள், பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள், பல்கலைக்கழக பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கப்படும். சமூகத்திற்கு தொண்டாற்றிய கல்விமான்கள், பெரியோர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

வாரிவளவு நல்லியக்கச்சபை தன் பணிக்காலத்தில் காரைநகரில் பல்துறைசார் வல்லுனர்கள் உருவாக களம் அமைத்துக் கொடுத்தது.

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை அனைவரையும் வருடம் முழுவதும் ஏதோ ஒரு நிகழ்வில் ஈடுபடுத்தி அனைவரும் சுறுசுறுப்புடன் இயங்க சுறுசுறுப்பாக இயங்கியவர் பட்டுமாமா. காரைநகரின் பொதுவாழ்வில் தனிமனித சாதனையாளர்கள் பலர் உள்ளனர். இந்த தனிமனித சாதனையா ளர்களுக்கு அமைதியான மக்கள் ஆதரவு இருந்தமையால் அவர்கள் சமூகத்தை முன்னோக்கி நகர்த்துவதில் காத்திரமான பங்களிப்பு வழங்கினர். ஒரு குறிப்பிட்ட கால பகுதியில் மாணவர் சமூகத்தை, இளைஞர் சமூ கத்தை உருவாக்குவதில் பட்டுமாமா சத்தம் இன்றி செயல்பட்டிருக்கின்றார்.



'பட்டு மாமா' என அழைக்கப்படும் சரவணமுத்து பத்மநாதன் காரைநகர் மேற்கில் வாரிவளவு குறிச்சியில் 1932ம் ஆண்டு ஆவணி மாதம் பிறந்தார். தனது தொடக்கக் கல்வியை வியாவில் சைவ வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை காரைநகர் இந்துக்கல்லூரியிலும் பயின்று பின்னர் இலங்கை எழுது வினைஞர்களுக்கான பொதுப்பரீட்சையில் சித்தியெய்தி கொழும்பில் இலங்கை போக்குவரத்துத் திணைக்களத்தில் எழுது வினைஞராகவும் பின்னர் யாழ் கல்வித் திணைக்களத்தில் நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றியவர்.

' பட்டு மாமா' அவர்களின் சேவைகளில் ஒரு நெகிழ்ச்சியான செயற்பாடாக 1991ம் ஆண்டு காரைநகர் மக்கள் இடம்பெயர்ந்து யாழ் குடாநாட்டின் பல இடங்களிலும் பரந்து வாழந்த சமயம், இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்ற காரைநகரைச் சேர்ந்த மாணவர்களையும் அவர்களுடைய பெற்றோர்களையும் அழைத்து யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் ஒரு பாராட்டு விழா நடாத்தி ஒவ்வொரு மாணவருக்கும் தலா ஆயிரம் ரூபாய்கள் ஊக்குவிப்பு பரிசாக அன்று வழங்கியிருந்தார். சொந்த ஊரை விட்டு இடம் பெயர்ந்த இக்கட்டான காலகட்டத்திலும் எங்கள் கிராம மாணவர்களின் கல்வியில் அக்கறையுடன் பட்டுமாமா அவர்கள் சேவையாற்றியமை 'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆல-

யம் பதினாயிரம் நாட்டல் அன்ன வாயினும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்ற புரட்சிக் கவிஞர் பாரதியாரின் வரிகளுக்கு இலக்கணமாக வாழ்ந்தமை நினைவூட்டுகின்றது. சமூக சேவையாளர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காரைநகரின் வரலாற்றில் மறக்க முடியாத இடம் பிடித்துக்கொண்ட 'பட்டுமாமா' அவர்கள் 2006ம் ஆண்டு கார்த்திகை மாதம் யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தார்.

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை 1995ம் ஆண்டு வெள்ளிவிழா கொண்டாடியது. 1995.04.17 அன்று யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகளுடன் காரைநகர் மாணவர்களிற்கு பராட்டலும் பரிசளிப்பும் நடைபெற்றது. அன்றைய தினம் நடைபெற்ற வெள்ளி விழா நிகழ்வுகளை பாராட்டி வாழ்த்துப் பா புனைந்திருந்தார் காரை எம்.பி.அருளானந்தன் அவர்கள். அவர்களது வாழ்த்துப் பா இங்கே எடுத்து வரப்பட்டுள்ளது.

## காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை
## வெள்ளி விழா ஆண்டு - 1995

வெள்ளி விழா காணும் நல்லியக்கச் சபையை
விருப்புடன் யாம் வாழ்த்துகின்றோம்
வாழ்த்துப் பா

எழில் பொங்கும் காரைநகர் ஏர் கொள் மண்ணில்
எழுந்து வளர்ந்துயர்ந் துறுதி பெற்று ஓம்பி
பொழில் நிறையப் புகழ்விரியப் புதுமை செய்து
பொங்கு நல் இயக்கசபை வாழ்க என்போம்.

வெள்ளி விழா காணுகின்ற சபையே வாழி
விரும்பியுன்னை வாழ்த்துகிறோம் மகிழ்வினோடு
அள்ளி அள்ளி அறநெறியும் கலையும் காட்டி
ஆதரித்து எமைவளர்த்த அன்னாய் போற்றி.

கல்வி வளம் கலைவளத்தை காத்த அன்னாய்
காரைநகர் மாணவர்க்கு உழைத்த தாயே
புள்ளிகளின் படிஉயர புரந்து நின்றாய்
புத்தாண்டில் புதுமையொடு பொழிந்து வாழி.

வள்ளுவனால் நாமடைந்த பேறும் ஔவை
வழியுமுரைத் தெமையுயர வைத்த காரை
நல்லியக்க சபை உலகம் நயக்கும் தொண்டில்
நனி பெருகத் தமிழ் வாழ்க காரை வாழ்க.

பாடசாலை மாணவர்க்கு போட்டிகளை வைப்பாய்
பல்கலையில் புகுபவர்க்கு பரிசுகளை கொடுப்பாய்
ஆடல் பாடல் கலைகளுக்கு அரங்கேற்றம் வைப்பாய்
அன்பென்னும் விளக்கேற்றி காரை இருள் களைந்தாய்.

தனிமரமாய் நின்றடர்ந்த தோப்பாகி ஈழ
தமிழர்க் கோர் குளிர்காவாய் தஞ்ச மளிக்கின்றாய்
பணிவினாற் பணிவேற்ற பத்மநாத நின்னை
பாராட்டி மகிழ்கின்றோம் பல்லாண்டு வாழி.

மறந்திட முடியாத மாமனிதன் நீ
மகத்தான பணிகளுக்கு நாயகனும் நீ
சிறந்த உன் பணிகளுக்கு சிரந்தாழ்த்தி நின்றோம்
சீரோங்க உலகுயர சிறந்து நனி வாழி.
சுபம்

காரை எம்.பி.அருளானந்தன்

## 'எனது ஊர் காரைநகர்' ஊடாக 'சேவையாளர்' விருது பெற்ற திரு.தி.தவரத்தினம் அவர்கள் ஈழத்து எழுத்தாளர் வரிசையில் பல விருதுகளை பெற்று வருகின்றார்



இன்று ஈழத்து எழுத்துத் துறை உலகில் பிரகாசம் பெற்று வருகின்ற முன்னணி இளம் எழுத்தாளராக சடை யாளி காரைநகரைச் சேர்ந்த திரு.திருச்செல் வம் தவரத்தினம் அவர்கள் விளங்கி வருகின்றார். காரை இந்துவின் பழைய மாணவனான இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைத்துறைப் பட்டதாரி என்பதுடன் யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடித்துறையில் டிப்ளோமா கற்கை நெறியினையும், பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை நெறியினையும் பூர்த்தி செய்துள்ளார். தற்போது அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றி வருகின்றார்.

ஆன்மீகம், சோதிடம், சூழலியல் ஆகியவற்றில் மிகுந்த புலமையைப் பெற்றுள்ள இவர், இவை சார்ந்து இதுவரைக்கும் 58க்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டு சாதனை படைத்துள்ளார். இவரால் எழுதப்பட்ட சில நூல்கள் வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் சிறந்தவையாகத் தெரிவு செய்யப்பட்டு மூன்றுமுறை விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பெருமைக்குரியவர். இவர் ஒரு கலைப் பட்டதாரியாக இருந்த போதிலும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியன சார்ந்த ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டு வருகின்றமை இவரது ஆற்றல் குறித்து வியப்பளிப்பதாகவுள்ளது.



சிறுவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்குப் பயன்படக்கூடிய நூல்களையும் வெளியிட்டு கல்வி உலகின் பாராட்டிற்குரியவராக விளங்குகின்றார். காரைநகர் பிரதேச செயலகத்தினால் ஆண்டுதோறும் நடாத்தப்பெற்று வருகின்ற தமிழ் இலக்கியப் போட்டிகளில் கடந்த ஆண்டுகளாக தொடர்ந்து வெற்றிபெற்று தமது எழுத்துத் திறமையை நிரூபித்து வருபவர்.

திரு.திருச்செல்வம் தவரத்தினம் அவர்கள் தாம் எழுதிய நூல்களை வெளியிட்டு வைப்பதில் புதுமையைக் கையாண்டு வருபவர். கடலிலும், மரங்களிலும், வரலாற்றுப் முக்கியத்துவம் மிக்க இடங்களிலும் மேடைகளை அமைத்து அவற்றில் நூல்களை வெளியிட்டு வருவது அனைவரதும் கவனத்தையும் ஈர்ப்பதாகவுள்ளது.

எழுத்துத்துறையில் மட்டுமல்லாது ஆன்மீகம், சோதிடம் ஆகிய துறைகளிலும் இவருக்குள்ள ஆழமான அறிவும், ஈடுபாடும் போற்றிப் பாராட்டுதற்குரியதாகும். ஈழத்திலும், தமிழகத்திலும் உள்ள திருத்தலங்களிற்கு ஆன்மீகச் சுற்றுலாச் சென்று வரும் இவர் பல அருளாளர்களையும், சித்தர்களையும், மத பீடங்களின் பீடாதிபதிகளையும் சந்தித்து அவர்களது ஆசிகளைப் பெற்றுக்கொண்டவர்.

கதிர்காமக் கந்தன் மீது அளவிலா பக்தி கொண்ட இவர் ஆண்டுதோறும் பாதயாத்திரையாகச் சென்று கதிர்காமக் கந்தனை வழிபட்டு வருகின்ற வழமையைக் கொண்டுள்ளவர். சோதிடத்திலே இவர் செய்து வருகின்ற ஆராய்ச்சியும், புலமையும் பெரு வரவேற்பினைப்பெற்று விளங்குவனவாகும். சோதிட அறிஞர்கள் பலரும் இவருடன் தொடர்புகளைப் பேணி இவரது சோதிட அறிவினைப் பகிர்ந்து கொண்டு வருகின்றமை இவரது சோதிட ஆற்றலுக்கு சான்று பகர்வதாகவுள்ளது.




எமது மூதாதையர்கள் மூலிகைகளை உணவாகவும், உணவில் சேர்த்தும் பயன்படுத்தி வந்ததன் மூலம் நீண்ட ஆயுளையும, நோயற்ற வாழ்வினையும் கொண்டு விளங்கினர். அத்தகைய மூலிகைகள் தொடர்பிலும் மிகுந்த அறிவினைக் பெற்று விளங்கும் தவரத்தினம் அவர்கள் இம்மூலிகைகளின் பயன்பாடு தொடர்பிலான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் முகநூல் ஊடான பதிவுகளை இட்டு வருவதுடன் விழிப்புணர்வு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்து அரும் பணியாற்றி வருகின்றார்.



## ‘எனது ஊர் காரைநகர்’ காரை நியூஸ் இணையத்தளம், காரைநகர் அபிவிருத்தி சபையுடன் இணைந்து நடாத்திய காரைநகர் சேவையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு 2020.01.05

**கா**ரை மண்ணிற்காகவும் மக்களிற்காகவும் தன்னலமற்ற் வகையில் பணி புரி-பவர்களை வாழும் போதே வாழ்த்துவோம். www.karainews.com இணையத்தளம் ஊடாக காரைநகர் சேவையாளர்களை இனம் கண்டு அறிவிக்குமாறு விடுக்கப்படுகின்ற வேண்டுகோளினை ஏற்று சேவையாளர்கள் இணையத்தள வாசகர்களால் காரணங்கள் குறிப்பிடப்பட்டு அறியத்தருகின்றார்கள். அரச உத்தியோகத்தர்கள், கல்விமான்கள், சேயைாளர்கள், பொதுப்பணியாளர்கள், ஆன்மீகவாதிகள் என தமது நளாந்த கடமைக்கும் செயற்பாடு களிற்கும் அப்பாற்பட்டு ஒருபடி மேலாக மக்களின் நலன் கருதியோ அல்லது எமது காரை மண்ணின் அபிவிருத்தி நலன் கருதியோ ஏதாவது ஒரு துறையில் அல்லது சேவையில் பணியாற்றியிருந்தால் குறிப்பிடத்தக்க சில காரணங்களையும் சேர்த்து அறியத்தருவதன் மூலம் அவர்களை ஊக்குவித்து காரை மண்ணின் மக்களின் நலனை மேலும் வளப்படுத்துவதே இந்த சேவையாளர் கௌரவத்தின் நோக்கமாகும். அது மட்டுமன்றி போர்க்கால சூழ்நிலையில் இருந்து வெளியே வந்த தற்போதைய இளைய சந்ததியினருக்கு பொதுப்பணி, சமூக அக்கறை, சிரமதானம் போன்ற தன்னலமற்ற பணிகளை செய்பவ ர்கள் தாம் வாழும் சமூகத்தினரால் கண்டுகொள்ளப்படுகின்றார்கள் என்பதை வலியுறுத்தி அவர்களையும் ஊக்கப்படுத்தவும் முடிகின்றது.

2017ம் ஆண்டு முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டு 20 சேவையாளர்கள் பொற்கிளி வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். 2017.12.31 அன்று மணற்காடு கும்பநாயகி அம்பாள் ஆலயத்தின் முன்னாள் அமைந்திருக்கும் காரைநகர் அபிவிருத்தி சபை காரியாலயத்தில் கௌரவிப்பு விழா நடைபெற்றது.

தொடர்ந்து இரண்டாவது தடவையாக 2019ம் ஆண்டு சேவையாளர் கௌரவத்திற்காக சேவையாளர்களை பரிந்துரைக்குமாறு இணையத்தளம் ஊடாக விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கு காரைநகர் மக்களிடம் இருந்து அமோக வரவேற்பும் தகவல்களும் கிடைக்கப்பெற்றன. அது மட்டுமன்றி 1980ம் ஆண்டுக்கும் 2009ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட போர்க்காலங்களிலும் காரை மண்ணில் பொதுப்பணியாற்றி மறைந்தவர் களை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்கள். அதன் காரணமாக காரை மண்ணிற்காக சேவையாற்றி மறைந்த சேவையாளர்களாக 5 சேவையாளர்கள் காலத்தால் மறக்கவும் மறைக்கவும் முடியாத சேவையாளர்களாக நினைவு கூரப்பட்டார்கள்.

காரைநகரில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் ‘எனது ஊர் காரைநகர்’ அன்பர்கள் தெரிவித்த சேவையாளர்களில் இருந்து 10 சேவையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு 2020.01.05 அன்று காரைநகர் புதுறோட் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள New Star கல்வி நிலையத்தில் காரைநகர் அபிவிருத்தி சபையினருடன் இணைந்து நடாத்தப்பட்ட சேவையாளர் கௌரவிப்பு விழாவின் போது பொற்கிளி வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

**அவ்வாறு கௌரவிக்கப்பட்ட சேவையாளர்கள் விபரம் வருமாறு:**

1. சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தகுருக்கள் -1991-1996 வரையான ஈழத்து சிதம்பர சிவப்பணி
2. திரு.வே.செல்வநாயகம் - ஈழத்து சிதம்பரம் ஐயனார் சிவன் இராஜகோபுர திருப்பணி
3. திரு.ந.பாக்கியராஜா - ஈழத்து சிதம்பரம் திருப்பணி
4. திரு.க.சோமசேகரம் - வியாவில் ஐயனார் தேவஸ்தானம் ஊடான சமய சமூக பணி
5. சிவஸ்ரீ வி.ஈஸ்வரகுருக்கள் - சிவப்பணி
6. திரு.க.தில்லையம்பலம் - கல்வி மற்றும் சமய சமூக பணி
7. திரு.சண்முகம் சிவஞானம் - சமய மற்றும் கலைப்பணி
8. திரு.சபாரத்தினம் மனோகரன் - களபூமி பிரதேச வளர்ச்சியின் ஈடுபாட்டாளர்
9. திருமதி சூரியா சிவரூபன் - காரை மாணவர்களிற்கான கல்விப்பணி
10. திரு.சங்கரப்பிள்ளை குகராஜா(குகன்) - சிரமதானம்,













மேலும் அடுத்த பக்கத்தில்... →

சமுதாயஅக்கறை, இளம்விவசாயி



இவர்களுடன் காரை மண்ணின் சேவையாளர்களாக பணியாற்றி காலத்தால் மறக்கவும் மறைக்கவும் முடியாத தன்னலமற்ற வகையில் பணியாற்றி மறைந்த சேவையாளர்களாக நினைவு கூரப்பட்டவர்கள் விபரம் வருமாறு:

1. அமரர் சு.முருகேசு - ஈழத்து சிதம்பரம் ஐயனார் சிவன் இராஜகோபுர திருப்பணி
2. அமரர் வே.சிவசுப்பிரமணியம் (10.40 மணியம்) ஈழத்து சிதம்பரம் ஐயனார் சிவன் இராஜகோபுர திருப்பணி.
3. அமரர்.அ.சி.சிவலிங்கம் - மணிவாசகர் சபை மற்றும் ஐயனார் சிவன் இராஜ கோபுரதிருப்பணி
4. அமரர் ஜெ.தில்லையம்பலவாணர் - காரைநகர் அபிவிருத்தி சபை
5. அமரர் சபாபதி சபாரத்தினம் - பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம்



New Star கல்வி நிலையத்தில் 05.01.2020 அன்று திருவெம்பாவை உற்சவ காலத்தின் 5ம் நாள் திருவிழா அன்று மாலை 5 மணிக்கு நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், கல்வியாளர்கள், பார்வையாளர்கள் என 400 பேர்களிற்கு மேற்பட்டவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் கலந்து கொண்ட 125 மாணவர்களிற்கு அதிஸ்ட மூலம் பணப்பரிசில்களும் பார்வையாளர்களாக கலந்து கொண்ட 25 பார்வையாளர்களிற்கு அதிஸ்ட மூலம் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டதுடன், கலந்து கொண்ட அனைவருக்கும் 'www.karainews.com' பெயர் பொறிக்கப்பட்ட பேனாவும் வழங்கப்பட்டது.



'எனது ஊர் காரைநகர்' சஞ்சிகை வெளிவர அனுசரணை புரிந்து வரும் Dr.V.விஜரத்தினம் மற்றும் கனடிய தொழிலதிபர் திரு.மகாதேவன் பாலசுப்பிரமணியம் ஆகியோர் இந்நிகழ்வுகளிற்கு தொகுப்பாளர் தீசன் திரவியநாதனுடன் இணைந்து நிதி அனுசரணை வழங்கியிருந்தார்கள்.



சேவையாளர்களாக கௌரவம் பெற்றவர்களிற்கு நல்லூர் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா அவர்கள் பொன்னாடை போர்த்தி பொற்கிளி வழங்கி கௌரவித்தார். கௌரவம் பெறும் சேவையாளர்களது சேவைகளை தொகுத்து திரு.ஆறுமுகம் செந்தில்நாதன்(சுவிஸ்) மற்றும் கலாநிதி வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம் அவர்களும் தெளிவுரையாற்றியிருந்தார்கள். இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்கள், கல்வியாளர்களை பெரிதும் கவர்ந்திருந்த இந்த விழா இனிதே இரவு 7.30 மணியளவில் நிறைவு பெற்றது.



**2017ம் ஆண்டு கௌரவிக்கப்பட்ட 'காரைநகர் சேவையாளர்கள்' விபரம் வருமாறு:**

1. மருத்துவர் சுப்பிரமணியம் நடராசா (அபிவிருத்தி சபை மாணவர் நூலகம்)
2. அதிபர் வே.முருகமூர்த்தி (யாழ்ற்ரன் கல்லூரி)
3. கலாபூஷணம் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை (சமய சமூகப்பணி)
4. முன்னாள் காரைகோட்ட கல்வி அதிகாரி பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் (கல்விப்பணி)
5. முன்னாள் காரை இந்து ஆசிரியர் K.M.செல்வரத்தினம் (KMS) (கல்விப்பணி)
6. முன்னாள் காரைநகர் பிரதேச செயலர் த.ஜெயசீலன் (பொதுப்பணி)
7. வே.சபாலிங்கம் (சிரமதானம்)
8. இ.திருப்புகழூர்சிங்கம்( மக்கள் தொண்டு)
9. இ.இராசதுரை (மக்கள் தொண்டு)
10. திருமதி வாசுகி தவபாலன் (கல்விப்பணி)
11. இ.சிறிதரன் (முன்னாள் ஊரி பாடசாலை அதிபர்)(கல்விப்பணி)
12. திரு.திருச்செல்வம் தவரட்ணம் (நூலாசிரியர்)
13. பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம்(யோகா ரீச்சர்) (கலைப்பணி)
14. கை.நாகராசா (மக்கள் தொண்டு)
15. திரு.து.நாகேந்திரம் (சமய பணி)
16. ந.கிருஷ்ணபவன் (யாழ்ற்ரன் கல்லூரி முன்னாள் உதவி அதிபர்)
17. திரு.எஸ்.கே.சதாசிவம் (பொதுப்பணி)
18. திருமதி நடராசா இராசமலர் (களபூமி முத்தமிழ் மன்றம்) (கலைப்பணி)
19. செல்வி வே.புஸ்பராணி(கல்விப்பணி)
20. திரு.நாகலிங்கம் பாலகிருஸ்ணன் (சிரமதானம்)


**காரைநகர் செய்திகள் உடனுக்குடன் தினம் தினம் பார்த்து அறிந்து கொள்ள**

**www.karainews.com**

**இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள். செய்திகள், செய்திகளிற்கு அப்பால் உள்ள உண்மைகள் விபர-மாகவும் விளக்கமாகவும் எடுத்து வருவதில்**

**' எனது ஊர் காரைநகர் '**

**எப்போதும் முன்னணியில்!**

## 2020.01.05 அன்று காறைநரகர் New Star கல்வி நிலையத்தில் நடைபெற்ற காரைநகர் சேவையாளர் கௌரவிப்பு நிகழ்வின் பதிவுகள்



















I Have Been Once Again Recognized With The Best & Top Award(Prestige Award). Top 5% Sales Representative In Canada. I Would Like To Take This Opportunity to Thanks All My Clients, Family, Friends and Others Support to Achieved This Award for 2020.

Thank you for your Trust.

Kannan Nadarajah

December 20, 2020

